


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீயின் வார்ப்புகள்

ஆசிரியர் :

**அம்பலவன் புவனேந்திரன்**

மணிமேகலைப் பிரசுரம்
தபால் பெட்டி எண் : 1447,
7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர்,
சென்னை - 600 017.
தொலைபேசி : 4342926
தொலைநகல் : 044-4346082
மின் அஞ்சல் : e-mail : Manimekalai@eth.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

| | |
|---|---|
| நூல் தலைப்பு | ➢ **தீயின் வார்ப்புகள்** |
| ஆசிரியர் | ➢ அம்பலவன் புவனேந்திரன் |
| மொழி | ➢ தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ➢ 2000 |
| பதிப்பு விபரம் | ➢ முதல் பதிப்பு |
| உரிமை | ➢ ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ➢ 11.6 கி.கி. |
| நூலின் அளவு | ➢ கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ➢ 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ➢ 128 |
| நூலின் விலை | ➢ **ரூ. 26.00** |
| அட்டைப்பட ஓவியம் | ➢ திரு. சாய் |
| லேசர் வடிவமைப்பு | ➢ கிறிஸ்ட் டி.டி.பி. சென்டர், சென்னை - 24. |
| அச்சிட்டோர் | ➢ ஸ்கிரிப்ட் ஆப்ஸெட், சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | ➢ தையல் |
| வெளியிட்டோர் | ➢ **மணிமேகலைப் பிரசுரம்,** சென்னை - 17. |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | தீயின் வார்ப்புகள் | 9 |
| 2. | வரம் தர வருவாய் | 12 |
| 3. | தூரத்துத் தண்ணி | 14 |
| 4. | என்பிள்ளை | 16 |
| 5. | இலையுதிர்காலம் | 18 |
| 6. | கவிதைச் சுரபி | 19 |
| 7. | பிரியாவிடை | 20 |
| 8. | காதலுக்காக | 22 |
| 9. | மனமே மயங்காதே! | 24 |
| 10. | பனிமழை | 26 |
| 11. | போலிகள் யாக்கிரதை! | 28 |
| 12. | சம்மதமா? | 29 |
| 13. | வேதனை | 30 |
| 14. | பருவகாலம் | 32 |
| 15. | ஜெபித்து ஜெயிப்போம் | 34 |
| 16. | ஆறும் சேறும் | 36 |
| 17. | புதிய பக்கம் | 38 |
| 18. | அன்னை தெரேசா | 40 |
| 19. | குளிர் | 43 |
| 20. | இது கடிதமல்ல | 45 |
| 21. | வாக்குறுதி | 48 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 22. | காலம் கதவு திறக்கும் | 50 |
| 23. | புதிதாகப்பாடு | 53 |
| 24. | செல்லு தூது சொல்லு | 55 |
| 25. | விடிவுவரும் | 57 |
| 26. | ஒரு சேதி | 59 |
| 27. | உணர்ந்துகொள் | 61 |
| 28. | நிலையற்ற நிலை | 63 |
| 29. | கைமாறு | 65 |
| 30. | தவமும் வரமும் | 67 |
| 31. | மௌன யாகம் | 69 |
| 32. | பதில்வேண்டும் | 71 |
| 33. | தேவையும் தேகமும் தேசமும் | 73 |
| 34. | பங்குகொள்வோம் | 75 |
| 35. | கவிஞன் | 77 |
| 36. | சிறகுகள் வேண்டும் | 79 |
| 37. | நீயும் நானும் | 81 |
| 38. | விடுதலை வேண்டும் | 83 |
| 39. | அழைப்பு | 84 |
| 40. | பிரார்த்தனை | 86 |
| 41. | தீயாகும் பூக்கள் | 87 |
| 42. | என்னரும் நண்பனுக்கு | 89 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 43. | இமைகளைத் தந்துவிடு | 91 |
| 44. | மௌனாஞ்சலியாகட்டும் | 93 |
| 45. | மரணித்த உறவுகள் | 95 |
| 46. | என்னவென்று சொல்வேனடி | 97 |
| 47. | ஒற்றுமை | 99 |
| 48. | தவம் செய்யும் லயன்கள் | 100 |
| 49. | தீராத சோகராகம் | 101 |
| 50. | என் பிரார்த்தனை | 103 |
| 51. | தேய்கின்ற தேசம் | 105 |
| 52. | என்னை அறிவாயா? | 107 |
| 53. | அவமானம் | 108 |
| 54. | என்னையும் அழைத்துக்கொள் | 109 |
| 55. | தண்ணீரில்லா மீன்கள் | 111 |
| 56. | நானாக நானில்லை | 113 |
| 57. | தாலாட்டு மாறிப்போனது | 114 |
| 58. | எண்ண அலைகள் | 116 |
| 59. | ஒரு தாயின் கடிதம் | 117 |
| 60. | உதிர்ந்த தளிர் | 119 |
| 61. | வேண்டுகோளொன்று | 121 |
| 62. | வெற்றிப்பூக்கள் | 123 |
| 63. | எரிநட்சத்திரங்கள் | 125 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

இங்கே, புத்தாடையுடுத்தி பவனிவருகின்றன எனது புதுக்கவிதைகள். தீயின் வார்ப்புகள் உங்களுக்குத் தெரிந்த தலைப்புத்தான்... இதற்குள் கவிஞன்கூட இன்னொரு ஜனனமெடுத்து வருவது பலருக்கு சொல்லாமலே புரிந்திருக்கும்.

ஆம், என்னுடைய தீயின் வார்ப்புகள், கவிஞன் மற்றும் இன்னொரு ஜனனமென்ற மூன்றுதொகுப்புக்களும் மணிமேகலைப் பிரசுரத்தாரால் ஒன்றாகத் தொகுக்கப்பட்டு உலாவருவதில் பெரிதும் உவகைகொள்ளுகின்றேன்.

ஒவ்வொரு தொகுப்பிலும் தனித்தனியான முகவுரை எழுதிய எனக்கு, இம்முறையும் முகவுரையென்று எழுதவேண்டுமா...? என எண்ணத்தோன்றியது... ஒரு சிறுவட்டத்துக்குள்ளே சிறகடித்துப் பறந்த என்னுடைய படைப்புக்கள், இன்று பரந்து விரிந்த எம் தமிழ்கூறும் நல்லுலகெங்கும் பாதம்பதிக்கப்போகின்ற மட்டற்ற மகிழ்ச்சியில் இங்கே எழுதிட முயற்சிக்கின்றேன். என்னை, உணர்வுபூர்வமாகப் பாதித்த சிலவற்றை உங்களுடன் பகிர்ந்துகொள்ளும் சிறுமுயற்சியே இத்தொகுப்பின் உட்தொனி என்று மட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பாளிகள் உருவாகிறார்கள் என்பதைவிட அவர்கள், தாம் வாழும் சமூகத்தால் அல்லது தேசத்தால் உருவாக்கப்படுகிறார்கள் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. அந்தப் படைப்பாளிகள் தான் வாழும் சமூகத்தின் துன்பங்களிலும், இன்பங்களிலும் துய்ப்பதனாலேதான் இலக்கிய வடிவங்கள் எழுகின்றன என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். படைப்பாளிகள் தன் சமூகத்தின் இன்பங்களை இசைகூட்டிப் பாடுவதுபோல் துன்பங்களிலும், தோல்விகளிலும் துவண்டுபோய்விடாது அவற்றின் வேர்களைக் கண்டறிந்து வெட்டிக் களைவதும் பரிகாரம் தேடுவதும், காலத்தின் கட்டாயமும் கடமையுமாகின்றது. அத்தோடு, அவர்கள் அந்த சமூகத்தினுடைய எழுச்சிக்கும் விழிப்பிற்கும் எழுந்துநின்று வழிகாட்டவேண்டியது அத்தியாவசியமாகும். இந்த வரைமுறைக்கு இவன் மட்டும் விதிவிலக்கல்லவே...

அந்தவகை முனைப்பின் முதல் முயற்சியே இந்தக் கவிதைத் தொகுப்பு. ஈழத்தேச விடுதலையில் என்னால் பங்களிப்புச் செய்யமுடியாது போய்விட்டாலும், என்னுள்ளுணர்வுகள் எல்லாவற்றையும் பொத்தி வைத்துக்கொள்ள முடியாததால், பொங்கிய மனக் குமுறல்களையே இங்கே சில கவிதை வரிகளில் குழைத்து வைத்திருக்கின்றேன். ஆற்றாக்கொடுமையினால் என்னுள்ளம் அழுதவற்றை அமுக்கிவைக்க முடியாது அவிழ்த்துவிட்ட வார்த்தைகளின் வர்ண ஊர்வலத்தையே நீங்களிங்கே தரிசிக்கப்போகிறீர்கள். இயற்கையோடு நான் கைகுலுக்கிக் கதைத்ததையும் காதலுடன் நான் கள்ளமற்றுக் களித்திருந்தவற்றையும், கவிதைக் கனிகளாக்கியுள்ளேன். அவற்றை நீங்கள் கண்டுணர வேண்டுமென்றே இந்தக் கன்னி முயற்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதைக்கு என்னால் முடிந்ததை இத்தொகுப்பின் மூலம் கொணர்ந்துள்ளேன். இனிமேலும், ஒரு படைப்பாளியின் பணியானது செவ்வனே நிறைவேறிட உங்களின் ஆசியும் ஆதரவும் என்றும் தேவையல்லவா...? அந்த நம்பிக்கை நலிவடையாது என்ற உறுதியோடும் உளப்பூரிப்போடும் அடுத்த அடியை அழுத்தமாய் எடுத்துவைக்கிறேன்.

முடிவல்ல ஆரம்பம்... என்ற இன்னொரு தொகுப்பை, மணிமேகலைப் பிரசுரத்தார் மூலம் உங்களுக்குப் படைக்கவேண்டுமென்ற புதிய முயற்சியில் இப்போது இறங்கியுள்ளேன். இந்நூலைப் பதிப்பித்துத்தந்ததோடல்லாமல், எவ்வளவோ சிரமங்களுக்குமத்தியில் தாமாக முன்வந்து இந்நூலை வெளியிட்டு வைத்தமைக்காகவும், என் மதிப்பிற்குரிய திரு. ரவி தமிழ்வாணன் அவர்களுக்கும் அவரது நிறுவனத்தைச் சார்ந்தவர்களுக்கும், இந்நூலை வெளியிட வேண்டுமென என்னைவிட ஆர்வம்காட்டிய அன்பர்கள் அனைவர்க்கும் எனக்கு வேறுவகையில் உறுதுணைபுரிந்தவர்களுக்கும், விமர்சனங்களை எழுதி என்னை ஊக்குவித்தவர் அத்தனைபேருக்கும் இவ்வேளையில் என் மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்...

யெர்மனி,
30.09.2000

***அம்பலவன் புவனேந்திரன்.***

AMPALAVAN PUVANENTHIRAN
LEHRER STRASSE. 20
47167 DUISBURG
GERMANY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீயின் வார்ப்புகள்

எங்கள் ஆத்மாக்களின் அழுகை
உங்களுக்குக் கேட்க
நியாயமில்லைதான்...
எங்கள் கண்ணீரின் கதைகளை
வடித்து எடுப்பதற்கு
வார்த்தைகளே இல்லை...
எந்தச் சகோதரியோ
தன் குழந்தைகளுக்கு - ஒரு
சிப்பாயை அப்பாவாக்கியதை
தப்பாகப் பேசுகிறீர்கள்...
வேலியில்லாத பயிர் - என்று
கேலி பேசுபவர்களுக்கும்
காலி நாய்களின் பார்வைக்கு
கதவு போடவுமே - அவள்
காவல் போட்டுக் கொண்டாள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொன்று...
என் தோழியொருத்தி
கடிதக்காரனின் காக்கிச் சட்டைக்கே
பயந்து நடுங்குகிறவள்...
இன்று
காவற்படை வீரனின்
காதற் கடிதத்திற்கு காத்திருக்கிறாள்...
அவள் கையேந்தவில்லை,
தன் கற்புக்கு
காவல் ஒன்று
தேவை என்று
கணவன் வரம் கேட்கிறாள்...
உங்களைத்தான் கேட்கிறேன்,
முகம் கொடுக்க முடியாமல்
மூக்கால் அழுகிறீர்களே!
வதையும் உபாதையுமாய்
வாழ்கின்ற எங்களுக்கு
வாழ்வு தர யார் வரப்போகிறீர்கள்???

வழிகாட்டுவோம் - என்று
வெளியேறிய நீங்கள்
வெளிநாடுகளில் கோழையாக
ஒளிந்துகொண்டு
ஒப்பாரி வைக்கிறீர்கள்...
உங்களை நம்புவதை விடுத்து - நாம்
வங்கக் கடலை நம்புகிறோம்.
எங்கள் வருங்காலம்
எங்களின் கையிற்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனாலேதான் புதிய பயணத்தை
நாங்கள் தொடங்கினோம்...
எங்களின் கைகளில்
அரிக்கேன் விளக்குகளில்லை
நாங்களே தீபங்கள்
எங்களுக்கெதற்கு விளக்கு?
தீயிற் கறையிருப்பதில்லை
அதனாற்தான் இன்னும் சீதையும்
கண்ணகியும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

(தூண்டில், ஜூலை-88.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரம் தர வருவாய்

தாமரை மலர் தன்னில்
தனித்துவமாய் அமர்ந்தவளே
பாமரனாய் இருந்தவனை
பாவடிக்க வைத்தவளே
பூமணம் வீசுகின்ற
புதுத்தமிழைக் கொண்டு
நானுனைப் பாடிட
நாமகளே வாழ்த்திடம்மா!

கலைகள் அறுபத்தினான்கையும்
கரத்தாலே இயக்குபவளே
சிரம்தாழ்த்தி துதித்தேன்
சிறியவனுக்கு அருள்தர வா
மரகத வீணை மீட்டும்
மாதேவி அன்னையே.
வரம் வேண்டி உந்தன்
பாதமலர் பணிந்தேனம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்களிலே பொருள்வைத்த
தூயதமிழ் அன்னையே
பற்பல கலைகளைப்
பாருக்கே தந்தவளே
அற்பன் எனை இன்று
ஆளாக்கி விட்டவளே
இப்பிறவி முழுவதிலும்
இவன்பாட அருள்வாயம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூரத்துத் தண்ணி

என்னவினை செய்தாயோ
என் அன்னையே...?
முன்னம் செய்தவினையிதுவோ
நானறியேன் தாயே...
விதியின் வினையோ
என்றறியேன் நானே...
என்னை அணைத்தெடுத்து
மகிழ்ந்த உன்கரங்கள்
இன்று என்னவானதம்மா...?
என்னை அழைத்து...
அமுதூட்டிப் பார்த்தகைகள்
ஏன் தளர்ந்து போனதோ...?
எனை வருடியன்று -
தலைசீவிய விரல்கள்
ஏன் உணர்வற்றுப் போயினவோ...?
என் விரல் பிடித்து-

அரிச்சுவடி வரைந்த
உன் விரல்களுக்கின்று
ஏதுபிழை வந்ததம்மா...?
விதியின் விளைவால்
உனைப்பிரிந்து வந்தேனா..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பப்படாமல் - அன்று
எனை அனுப்பிவைத்தாயே...
சதிகாரர் செய்திட்ட
வினையை எண்ணி -
சஞ்சலம் கொண்டு
இடறி விழுந்துவிட்டாயா..?
விருந்துக்கு உன்முன்னே
பிந்திவரும் பிள்ளையிவன்
மருந்துகொண்டு - இன்று
உன்னிடம் வரமுடியவில்லையே...
என் விழிகளுக்கு
எட்டாமல் நடந்தவற்றை
எண்ணியெண்ணி - என்மனம்
வெதும்பி வேகும்தினம்...
எழுத்துக்குள் அடங்கிடாத
ஏக்கங்களும் விம்மல்களும்
எழுந்து நித்தம் மடிவதை
எப்படி உனக்குச்சொல்வேன்...?
என் இதயமது-
கருகிச் சருகாவதற்குள்
உன்னிடம் ஓடிவருவேன்...
நான் தவழ்ந்த மடிமீது
தலைசாய்த்தாலே - இந்த
தாளாதசோகம் தீருமம்மா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்பிள்ளை

என்கனவுவொன்று நனவாகும்வேளை
எழுந்துவரும் தங்கமணித்தேரே - அது
பொன்வண்ணக் கரங்களினால் நாளை
பொழுதெல்லாம் கவியெழுதும் நேரே.

நாளும்நாளும் நான்எழுதும் பாடல்
நாளாக இசையோடு கூடும் - மெல்ல
நானதனை அரங்கேற்றிப் பாடும்
நாளதனை என்னுள்ளம் தேடும்

தவழ்ந்துவரும் தென்றலதை நுகர்ந்து
தளர்ந்துமிதந்து நானுமின்று மீண்டேன் - நேரில்
தவழ்ந்து எழுந்து நடைபயிலும் பிள்ளை
வளர்ந்து வந்து எனைமீட்கும் நாளை.

சூழல்சுரக்கும் இனியநாதம் வந்து
குயில்பாட்டை நினைவூட்டிச்செல்லும் - பெற்ற
மழலைமொழி கேட்டுக்கிறங்கும்போது
மகிழ்ச்சியும் தன் எல்லைதனை வெல்லும்
அறுசுவை உண்டியுடன் பழம்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனையும் புசித்துபருகி ருசித்தேன் - நான்
பெறும்பிள்ளை அழைந்திட்டகூழைப்
பெற்றுச்சுவைத்து மேலும்மேலும் களிப்பேன்.

என்பிள்ளையிவன் எனப்பேச வைப்பேன்
எழுந்துவரும் சிங்கமாக்கி முடிப்பேன் - என்றும்
என்னைப்போல் எழுதிக்கொண்டிருந்திடாமல்
எட்டுப்படி மேல் இருந்திடச்செய்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலையுதிர்காலம்

நிழல் மரங்களே-
இது என்னகோலம்..?
யார் உங்களைத்
துகிலுரிந்துவிட்டு
துணிவோடு போனார்கள்..?
மௌனமாய் இருந்தால்
என் கேள்வி என்னாவது?

ஓ-
கார்த்திகை மழையில்
களித்து நீராடிடத்தான்
ஆடைகள் களைந்தீரோ...?
அதற்கும் பதிலில்லையா...
தேசம் எங்கிலும்
தீபாவளி கொண்டாடும்போது
நீங்கள் மட்டுமேன்-
நிர்வாணவாய் நிற்கிறீர்...?
என்ன முணுமுணுக்கிறீர் -
காலதேவனின் கட்டளையா...?
அப்படி என்றால் -
அவர் சித்திரைக்குத்தான்
சேலைவாங்கித் தருவாரோ...?
என்ன அவலமிது -
அதுவரை உங்களுக்கு
நீண்ட நிர்வாணம்தானா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சுரபி

மங்கையிவள் கண்ணின் வண்ணம் - நீல
மலரில் விழுந்ததோ...?
கங்கை இவளின் கூந்தல் கண்டே
தரையில் தவழ்ந்ததோ...?

விந்தையான விரல்கள் கண்டு - மகர
வீணை சிலிர்த்ததோ..?
வெளியில் வந்ததென்றல் கூட
வியப்பில் குளிர்ந்ததோ...?

பொன்னில் வார்த்த சிலைகள் - இவள்
போல இருந்ததோ..?
பொழுதுசாயும் நேரம்வானில்
பூவை வண்ணமோ...?

கெண்டை போன்ற கால்கள் - தங்க
தண்டை அணிந்ததோ...?
வண்டு வந்துமொய்க்க கூந்தல்
வதங்கி விழுந்ததோ...?

இவளைக் காணும் பெண்களுக்கு
ஆசை பிறந்ததோ...?
இளையவனிவனின் நாவில் - புது
கவிதை சுரந்ததோ...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியாவிடை...

என்னிடம் சொல்லுங்கள்...

இது அவசியம்தானா...?
இலங்கை இரண்டாவதற்குள்
எங்களுக்குள் பிரிவுவந்து
பிய்த்துக் கொள்வதா...?
பொதுநலம் என்பது -
பொய்யாகிப் போனதா..?
போனவர்கள் மீண்டும்
ஈழத்துக்கு மீழ்வதா...?
கோழை என்றபேய் -
உங்களில் குடியேறிவிட்டதா...?
வெட்கமே உங்களிடம்
வெட்கித்துப் போனதா?
இது உங்களுக்கே -
நியாயமாய் தோன்றியதா...?
வெளிநாடென்று - யாவரும்
வெளியேறிப் போய்விட்டால்
வெற்றுப்பூமியில் - யார்
விடுதலை பெற்றுத்தருவது...?
ஆண்அழகன் என்றுங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது சொன்னதுண்மை..
துக்கத்தைத் துரத்தியதும்
தூக்கத்தைத் தொலைத்ததும்
உங்கள் தேகத்தில்கொண்ட
காதலினால் அல்ல...
எங்கள் தேசத்தின்மேலுள்ள
காமத்தினால் என்பதை -
என் கண்களில்
கண்டுகொள்ளுங்கள் காதலரே..!
துப்பாக்கி ஏந்துகின்ற -
பாக்கியம் கிடைக்கவில்லை
துர்ப்பாக்கியசாலி நீங்கள்...
கையில் வாள்தந்து
வாழ்த்துக் கூறி -
களமனுப்பும்நாள் வருமென்று
கண்ட கனவுகளெல்லாம் -
களவு போய்விட்டன...
உயிருக்கு ஆசைப்பட்டு
ஓடிப்போகும் உங்களை
ஒருமுறை பார்ப்பதற்காய்
ஓடிவந்தேன் - எதற்காக..?
உங்கள் கண்களில் வைத்திருந்த
என் பாதிவுயிரை -
பறித்துக் கொள்ளத்தான்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலுக்காக...

நீ எனக்கு -
பிறந்தநாள் வாழ்த்துக்களை
அனுப்பும்போது
வாழ்த்துக்களை மட்டும்
வரைந்து அனுப்பு...!

முகம் பார்க்கும் -
என் வீட்டுக் கண்ணாடியையே
நான் பொய்சொல்லக்
கற்றுக் கொடுத்திருக்கிறேன்...
நீயும் அதனுடன்
ஒத்துப்போக மாட்டாயா...?
வாழ்த்துக்களை மட்டுமே எழுது
வயதுகளை அதில் வரையாதே...!

இளமையுடன் வாழவேண்டித்தானே
இறைவனுக்குத் தினம்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணபித்துக் கொண்டிருக்கிறேன்....
மனிதவாழ்க்கை வட்டத்தை
மறுதிசை நோக்கி -
மாற்றிச் சுழலவிடவும்
அதில் குறிப்பிட்டிருக்கிறேன்...
என்வயது ஐம்பதில்தொடங்கி
இருபதில் நின்றுநிலைக்க வேண்டும் -
என்பதே என்னாசை...
அப்போதுதானே - உன்னை
காலமெல்லாம் காதலிக்கமுடியும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமே மயங்காதே...!

மனமே - நீ
சிறிதாகிப் போகாயோ..?
மல்லாடுகின்றேன்-
உன்னால் தினமே
நாள் நாளாய்
நலிவடைகின்றேன் - உன்னால்
நீமட்டும் வளர்கின்றாய்
நிதமும் - தன்னால்...
மனமே..!
என் இரங்கல்பா
கேட்கலையா - உனக்கு-
மதிகெட வைக்கிறாயே
என் அழுகைக்கும் -
அழுக்கிற்கும் யார்பொறுப்பு...?
நீதானே - ஆட்டியெனை
நித்தம் வாட்டுகிறாய்...
உன்னைக் கட்டிப்போட
ஒருவழியும் தெரியலையே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசையில் ஏங்குவதும்
அதற்காக ஓடுவதும் -
பாதையில் திசைமாறி
பள்ளத்தில் வீழ்வதுவும்
பாவி உன்னால்தானே...
தூங்காமல் விழிக்க
துயர் இரவுகளெத்தனை...?
ஏங்கியேங்கி இளைத்து
எறும்பாகிப் போனேன்...
நீ மட்டும் -
காட்டு எருதாய்விளைந்து
கடுமையாய் தாக்குவதேன்..?
நாட்டம் வைப்பதில்
நன்மைபெறச் செய்யாயோ?
கூட்டம் குஞ்சரியென்று
குலவித்திரிவதை நிறுத்து..!
ஏற்றம்வர எனக்கு -
எதிரில்நின்று வழிகாட்டு...!
எதிலும் மயங்காதபடி
எனைமாற்றி அனுப்பு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிமழை

என் விழிகளிரெண்டும்
வியப்பால் விரிகின்றன...
என்ன விந்தையிது
வானத்துக்கும் பூமிக்கும்
வர்ணம் மாற்றிவைக்க
கட்டளையிட்டது யாரோ...?
நீலவானம்தான் - இரவில்
நிறம் மாறிப்போனதோ...?
சூரியன் இன்று - குளிரில்
சுருண்டு தூங்கிவிட்டானோ...?
பச்சைப் புல்வெளிகளெல்லாம்
வெள்ளைவிரித்தது - எதற்காக...?
மரங்கள் மனைகளெல்லாம்
இரவோடு இரவாக
விதவைகளாகி -
வெள்ளையாடை பூண்டு
விடிந்தும் விடியாததுமாய்
கண்ணீர் வடிக்கின்றனவா..?
என்ன நிகழ்ந்தது - இங்கு...
வர்ணங்கள் சூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனங்களும் கூட -
வெள்ளையால் போர்த்தி
உறங்கிக் கிடக்கின்றனவா..?
அரசியல் தலைவர்யாரும்
அம்போ என்று - மேலே
போய்ச்சேர்ந்து விட்டாரோ...?
இப்படி இது இருக்க -
சின்னஞ் சிறார்களுக்கெல்லாம்
அப்படியென்ன குதூகலம்...?
சக்கரப் பாதங்கள்கொண்டா -
சாலைகள் தோறும்
சறுக்கி விளையாடுகிறார்...?
அட என்ன அதிசயம்
வெள்ளை மழையும் -
வெளியில் பொழிகின்றதே...
வெடுக்கென்று கைநீட்டினால்
சில்லிட்டு சிதறுகிறதே...
என்னுடைய தேசத்தில்
இப்படி ஆனதில்லையே...
இது புதுமைதான் - எனக்கு
புதுத்தேசத்தில் கால்வைத்தவேளை
குளிர்பதனப் பெட்டிகளை
எங்கிருந்தோ கொண்டுவந்து
எல்லா இடங்களிலும்
இப்படியா கொட்டிவிடுவது..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலிகள் யாக்கிரதை..!

புழுதியில் குளிக்கும் புதுமனிதா
புதையலைக்கண்டு மயங்காதே - நலமாய்
பொழுதுகள் உனக்கும் புலர்வதற்கும்
போலிகளைத்தேடி பொசுக்கு..!

விடியும்விடியும் என்றிருந்து
விழித்தபடியே தூங்கிப்போனாய் -வரும்
முடிவுகள் உனக்கும் சுபமாகும்
முழுமனதாய் முயற்சிசெய்..!

நம்பிக்கைவைத்தோர் நாசம்செய்ய
நாளெல்லாம்நீ ஊமையானாய் - திடமாய்
எம்பிக்கைதூக்கி உறுதிபூண்டால்
எதிலுமே முழுவெற்றி எழும்....!

பாசம்பந்தங்கள் என்று பேசுகின்ற
பாசாங்குகளால் நீதுவண்டிடாதே - வெறும்
வேசத்து நஞ்சுள்ளநெஞ்சினரை
வெளியுலகிற்கு விரட்டிவிடு.!

விழுதுகளான நல்லுறவுகள் உன்னை
வீழ்ந்துவிடாமல் காக்குமென்றாய் - அங்கே
பழுதுகள்சிறிதேனும் வந்துவிட்டால்
பட்டுப்போய்விடுவாய் பார்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்மதமா?

கடிதங்களை எழுதாதே கண்மணியே - நாம்
காதலராகி விடவில்லை இன்னுமடி - உன்
பிடிவாதத்தைக் கொஞ்சம்விட்டுவிடு - இது
பிழையில்லை பிரியத்தைச் சொல்லிவிடு...!

தூது சொல்லிஅனுப்பாதே தூயவளே - தொலை
தூரத்தில் இல்லையடி நானும்தான் - கொடும்
சூதுவிளையாட்டு இதுவல்ல நடுங்காமல் - உனது
தூய அன்பை என்னிடத்தே கூறிவிடு..!

பாட்டுப்பாடி அழைக்காதே கண்ணே - உன்
பாட்டைப்புரியும் திறனில்லைஎனக்கு - நெஞ்சக
கூட்டுக்குள் இருக்கும் அன்பைக்காட்ட - மெல்ல
கூப்பிட்டால் போதும் நானங்குவருவேனடி....

ஜாடைகளைப் புரிந்துகொள்ளும் திறனில்லை - என்
ஜாதிமல்லிகையே புரியும்படி சொல்வாயா - வர்ண
ஆடைகள் அணிந்துவரும் தேவதையே - இந்த
ஆடவனின் காதில் உன்காதலைச் சொல்லிவிடு..!

கவிதைகளில் வரைந்து எனைக்கலக்காதே - தமிழ்
கற்றதெல்லாம் நான் கொஞ்சம்தான் - நமது
சரிதையில் கவிதைகளைச் சேர்க்காதே - புதுச்
சங்கமத்தை கொஞ்சம்தான் சொல்லிவிடு...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதனை

மேகமே...

என் மேல் கோபமேன்..?
நீ விதைத்துவிட்ட
காதல் விதை
முளைப்பதற்கு முன்னால்
ஏனிந்தக் கபடநாடகம்...?
நீரை வார்க்காமல்
நீ விரைந்து
போய் மறைந்திருந்தால்
நியாயம் இருக்கலாம்...
இடியை மட்டும்
என்மேலே..
இறக்கிவிட்டுப் போனதில்
என்ன இலாபம் உனக்கு..
விதைபுதிது
நிலமோ பழுது...
என்று தெரிந்திருந்தும்
விதைத்தது யார்குற்றம்...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தினைச் சரிவர -
செப்பனிட வேண்டியது
யார் பொறுப்பு..?
வேதனையை ஊற்றும்படி
யாரும் கேட்கவில்லை...
தாகம்தீர்க்கும் நீ
நீரைச் சொரியாமல்
தீயை வார்த்துவிட்டு
திருட்டுத்தனமாக-
போய் மறைந்துவிட்டாயே...
இது எந்தவகையில்
பொருந்தும்..?
எப்படி நியாயமாகும்...
காற்றடிக்கும் திசையில்
கவனித்துச் செல்லுமுனக்கு
காதற்பயிரின் உன்னதம் -
எங்கே தெரியப்போகிறது...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவகாலம்

உன்னை நான்
அப்படியேதான் பார்க்கிறேன்...
ஏன் இப்படி -
ஒளிந்து மறைந்து
பார்வையால் என்விழிகளில்
பச்சை குத்துகிறாய்...?
வித்தியாசாலை விடுப்பில்
நான் -
வெளியூர் சென்றபோது
என்ன வித்தியாசம்
நிகழ்ந்தது உனக்கு..?
என்னால் எதையும்
புரிந்து கொள்ள முடியவில்லை..
விடுமுறை நாட்களில் -
உன்னுடன் பேசுவதற்கு
எவ்வளவோ விசயங்களை
உள்ளத்தில் சேமித்தேன்...
இன்று - உன்
திருட்டுப் பார்வையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமே -
தொலைந்து விட்டேன்..
என்னமாயம் நிகழ்ந்தது..?
கலகலத்த உன்சிரிப்பு
கள்ளச் சிரிப்பானதேன்..?
நம் நேசக்கதையில்...
யாரும் புகுந்து
நெருப்பினை வைத்து
பற்ற வைத்தார்களா...?
என் கனவுகளுக்கு
கல்லறை கட்டப்பட்டதா..?
என் மகிழ்ச்சிகள்
மரித்துப் போய்விடுமா..?
எத்தனை கேள்விக்கணைகள்
என்னைத் துளைத்தன..
உன்னிடம் கேட்காமலே
என்மனம் கெட்டது..
மூன்று நாட்களின் பின்னர்தான்
அந்த முடிச்சவிழ்ந்தது..
என் வீட்டில் -
பெரியவர்கள் சிலர்
பேசிக்கொண்டிருந்தார்கள்
நம்ம புனிதாவும்-
'பூப்பெய்திவிட்டாள்...'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெபித்து ஜெயிப்போம்....

தாயின் மலர்ப்பாதம்
வணங்குதல் போல் -
தாயக மண்ணினை
வணங்கிடுவோம்..
நோயில் பிணியில்
நொடிந்தவர் தமக்காய்
நொடிப் பொழுதேனும்
பிரார்த்தனை செய்வோம்..
முடிந்தவரைக்கும்...
நோன்பிருப்போம்...
முடியாதவர்க்கும்
உதவிகள் செய்வோம்..
தேசங்களின் எல்லை -
திரை விலகவேண்டி
தீர்க்கமாய் முடிவொன்று
எடுத்துரைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கெட்டும் தீவிரமாய்
பறைசாற்றிடுவோம்...
மனிதாபிமானிகளின் பாதங்களில்
மண்டியிட்டுத் தொழுவோம்...
மதம் ஒன்றுதானென்று
மக்களுக்கு ஓதுவோம்...
வறுமைகள் விலகிடவும்
வளங்கள் சேர்ந்திடவும்
வாய்ப்புகள் தேடி -
முயற்சி செய்வோம்..
உலகம் முழுவதும்
உத்தமர்கள் தோன்றிட
உளமார யாவரும் -
உருகிப் பிரார்த்திப்போம்...
குருதி சிந்திடாத - சித்தாந்த
குவலயம் ஒன்றினை
கூடியவிரைவில் பிரசவிப்போம்...
கூச்சலிடுகின்ற தீவிரக் கும்பலை
கூவி அழைத்துவந்து
அமரச்செய்து-அவர்க்கு
அகிம்சைப்பாடம் புகட்டிடுவோம்...
அனைவருக்கும் நலம்வேண்டி-
அவருடன் சேர்ந்து பிரார்த்திப்போம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறும் சேறும்

அவன் வந்த நாளில்
வாழ்க்கை இனித்தது...
சேற்றில் இருந்து -
ஆற்றில் விழுந்த மாதிரி
குதூகலம் அவனுக்கு...
சேற்று வாழ்க்கையில்
சோற்றுக்கும் திண்டாட்டம்
சோதனைகள் ஏராளம்...
ஆற்றில் விழுந்ததால்
அத்தனையும் கழுவி -
அடித்துச்சென்ற உணர்வு...
உள்ளூர உவகையுடன்
கள்ளூறும் கதைகளை -
கடிதங்களில் வடித்தான்...
கஸ்ரங்களில்லாது -
காசுபணம் சேர்த்தான்...
களிப்பில் தினம்தினம்
களிநடம் புரிந்தான்...
கேளிக்கைகளைத் தேடியதனால்
கேவலங்களும் தேடிவந்தன..
குடி-வாடிக்கையானதால்
கூட்டமொன்று அவனோடு...
வாழ்க்கைப் படகு
காலவெள்ளத்தில் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டவிழ்த்துக் கொண்டதை
கண்டறிந்து கொள்வதற்கு
நேரமேது நிமிசமேது -
அவனுக்கு...?
அது அடிபட்டுப்போய்
மோதுண்ட பின்புதான்
ஆற்று வாழ்க்கையைவிட
சேற்று வாழ்க்கையின் -
அவசியம் தெரிந்தது...
அன்றைக்கன்று-இதில்
அத்தனையும் இருந்தது...
நிம்மதி ஒன்று மட்டும்
நிமிசத் துளியிலும்-
காணக்கிடைக்கவில்லை...
இத்தனை காலமும்
நரகம் என்னும்
நகரத்திலா குடியிருந்தான்-
அவன்..?
முன்பு வாழ்ந்தது
சாதாரண சேற்றிலல்ல-
சந்தணச்சேறு என்று
கண்டு கொள்வதற்கு
இந்த அஞ்சாதவாச-
தவத்தினால் வந்தவரமா
கற்றுக் கொடுக்கவேண்டும்...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பக்கம்...

அடி பெண்ணே...!
வெள்ளைச் சேலை
வேசத்தை விலக்கி -
வெளியே வா...!
கண் அவன் என்றார்கள்
அவன் போனபின்
உன் கண்களை
மூடிக் கொண்டிருப்பது
முட்டாள் தனமல்லவா...?
கண்களை அகலத்திற..!
இங்கே, விரிந்து கிடக்கின்ற
விண்ணைப்போல
உன்னுடைய மனசும் -
நிர்மூலமாகட்டும்..!
தலையில் முக்காடிட்டு
இன்னுமின்னும் -
மூலைக்குள் இராதே..!
உன்னை 'மூழி' என்று
மூச்சுவிடாமல் பேசுகின்ற -
இந்த சமூகத்தின் முகத்தில்
காறி உமிழ்ந்துவிடு...!
மண்ணோடு புதைந்தது
உன் பூவும் பொட்டும்தான்-
மனசு இல்லையே...
உன் - ஆணைகளுக்கு
கட்டுப்படாத ஆசைகளையும் -
கணக்கிலடங்காத கனவுகளையும்
யாரும் புதைக்கவில்லையே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகையைத் தொலைத்திட்ட பூவே
சின்னதாய் செய்தி சொல்லு...!
உன் உதடுகளில்
புன்னகையைப் பூட்டுகிறேன்-
பூவிலங்கும் சூட்டுகிறேன்..!
மூடநம்பிக்கையுடன்
குடித்தனம் நடத்துகிறவர்களின்
கூட இருந்து-உன்
கொஞ்ச வாழ்க்கையையும்
கொன்று விடாதே...!
இந்தச் சின்னவயதில் - உன்
சிறையை உடைக்காவிட்டால்
சிதைந்து போவது -
உன் தேகம் மட்டுமல்ல
பொன்னான எதிர்காலமும்தான்...
நம் தேசத்து
எதிர்கால இளைஞர்களின் -
சக்தி உனக்குத் தெரியும்...
அவர்கள் மனதின்
சங்கதிகளை நீயும் அறிவாய்...
அதனாலேதான் -
அறுதியிட்டு உறுதியளிக்கிறேன்...
என் சகோதரியே...!
சின்னதாய் சேதி சொல்லு -
உன் வார்த்தையிலே
புது வாழ்க்கையுள்ளது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை தெரேசா

அன்னையே-என்
அன்னைக்கும் அன்னையே...!
உன் - ஒளி வழங்கும்
விழிகளுக்கு உறக்கமேது..?
உன் - பொன் விரல்கள்
வருடிக் கொடுத்ததால்
பொலிவுற்ற முகங்கள்
எத்தனை எத்தனை..?
உன் தீண்டலினாலும்
தூண்டலினாலும் -
தேறியதேகங்கள் எத்தனை..?
திகைத்து, உன்திசை திரும்பிய
தேசங்கள் எத்தனை...
உன் பஞ்சுப் பாதங்களை
அலங்கரித்துத் தேய்ந்த -
பாதரட்சைகள்
பூர்வ ஜென்மத்தில்
புண்ணியம் செய்தனவோ...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றில் ஒன்றாய்
நானாகக்கூடாதா என்று
என்னுள்ளே ஏக்கம்...
கைவீசிக் கைவீசி
கதைபேசி விதைதூவி
நீ கொள்ளைகொண்ட
உள்ளங்கள் கோடிகோடி....
தள்ளாடித் தள்ளாடி
தரையெங்கும் நீபடர்ந்து
பிள்ளைகளாய் பிணியர்களை
பேணிப் பாதுகாத்தவர்
பாரில் யார்தாயே..?
உள்ளத்தில் பிள்ளையாய்
உருவத்தில் கருணையாய்
வெள்ளையாய் சிரிப்பதில்
பவனிவரும் பனிநிலவாய்
கள்ளமில்லா காதல்கொண்ட
கனிவான தேவதையாய்
இம்மண்ணில் வந்தவளே -
உன் திருவுடலுக்குள்
தீயைக் கொண்டு
புதைத்துவிட்டது யாரோ...?
எத்தனையோ நாசுகளுக்கு
சுகந்த சுவாசமளித்திட்ட -
உன் சுவாசப்பையைச் சுற்றி
சுவரெழுப்பியது யாரோ...?
பூவுலகே பணிந்துபோற்றும்
பூம்பாதச் சுவடுகளை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூட்டுக் கொண்டு
பிணைத்துப் பூட்டியது யாரோ...?
நாங்கள் காணாத ஆண்டாளாய்
கண் முன்னே வந்தவளே...!
எவருமே தீண்டிடாத
பிணிகளை - நீ தோண்டி
எறிந்ததாலோ என்னவோ
நீ காதல் கொண்ட
தேவதூதன் கூட - உன்னை
தீண்டிடாமல் மௌனித்தான்...?
நீ - மார்க்கண்டனின்
மகளென்று நிலையாக
நம்பியுள்ள உன்பிள்ளைகளின்
நம்பிக்கை - என்றுமே
நலிவடையக்கூடாது தாயே...!

(அன்னை நோயின்வாயில் அகப்பட்டிருந்த செய்தி-
என்னை நோகடித்தபோது எழுதியது...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிர்...

எப்படி உன்னிடம்
எடுத்துச் சொல்வேன்...?
என்னிடம் வாராதே -
விலகிப் போய்விடு!
துயில்வந்து
விழிவாசல்தன்னை
மூடிடும் வேளை
தூங்கவிடாமல்
தொந்தரவு செய்கிறாய்..
எவ்வளவு ஆத்திரம்எனக்கு
பொறுமையை இழந்து
புழுங்கித் தவிக்கிறேன்..
என்னிடம் வராதே
எட்டிப்போய்விடு..!

கண்டகண்ட இடங்களில்
கட்டித்தழுவுகின்ற
மேல்நாட்டு மாந்தர்போல்
என்னைத்தொட்டுதொட்டு
தொடர்ந்து வந்து
கட்டிக் கொள்வது - எனக்கு
கடுகளவும் பிடிக்காது...
வெளியில் நின்று
வேலை செய்யலாமென்றால்
நீயேநிதம் வந்து
வாட்டி வதைக்கின்றாய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயில் காலங்களில்
வெட்கப்பட்டு ஒளிகிறாயா...?
இங்கே
காலகாலமாய் - உன்
கைவரிசையைக் காட்டாது
உல்லாசமாய் உன்விருப்பம்போல்
வேறுதேசம்போய்
வரண்ட தேகங்களுக்கும்
உன் வதனத்தைக்காட்டு...
உன்னால் எனக்கு
நடுக்கத்தால் வந்தபயமேதவிர
பயத்தால் வந்தநடுக்கம் -
கிடையவே கிடையாது...
நீ நகரமாட்டாய் -
அது எனக்குத்தெரியுமடி...
இங்கே
உன் தொல்லைகளால்
துவண்டு போனேன்..
இனியும் தாக்குப்பிடிக்க
என்தேகம்
தாக்குப்பிடிக்காது தாயே...
நான் என்தாயகத்துக்கு
அடுத்தாண்டில் தாவிவிடுவதாய்
முடிவாகவுள்ளேன் தாயே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது கடிதமல்ல

நண்பனே - நீ
நோயின் வாயில் இருப்பதை
நான் கண்டுகொண்டேன்...
ஓரப்பார்வையும் -
கள்ளப்புன்னகையும்
காட்டிக் கொடுத்துவிட்டதே...
மிகக் கவனமாயிரு....!
இந்நோய்-
பாயில் படுக்கவைக்காது
பாடுபடுத்தும்...
தூக்கத்தைத் துரத்தும்-
துணிவைத் துலக்கும்...
ஏக்கத்தினால் எல்லாவற்றையும்
எகிறிடச் செய்யும்...
ஓரிரு வார்த்தைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருக்கும் வரைக்கும் -
உடலெங்கும் வலிக்கும்...
ஒரு நொடிப்பார்வை
உன்மேல் விழுந்தால்
பாதம் முதல் உச்சிவரை
ஏதோ ஒருபாதரசம்
பாய்ந்து பரவும்..
மூன்று நிமிசத்துள் -
நூறுமுறை முகம்பார்ப்பாய்...
கண்ணாடியில் உன்னுடைய
பிம்பம் தெரியாது...
நெஞ்சில் விழுந்தபிம்பம்
நேரில்வருவதாய் தோணும்...
பக்கத்தில் யார்நின்றாலும்
பார்த்துக்கொள்ள மாட்டாய்...
பார்வைக்கும் எண்ணத்துக்கும்
பாதை இருக்காது...
எண்ணங்கள் எங்கெங்கோ
எழுந்து சுற்றித்திரியும்...
சந்தித்துக் கொண்டால்
நாளொன்று நாளிகைபோலாகும்...
பிரிந்து வந்தாலோ-
வாரம் வருசமாய்த் தோணும்...
சில வேளைகளில் -
பெற்றவரையும் எதிர்த்து
பெரியவர்போல் கதைப்பாய்...
சுற்றிவர உள்ளவரை
தூசென்றும் மதிக்காய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ணங்கள் பார்த்து
வடிவாய் உடையுடுப்பாய்...
வாசலிலே நின்றுகொண்டு
வழியெதுவும் தெரியாததுபோல்
வாய்க்குள்ளே முணுமுணுப்பாய்...
தருணங்கள் பார்த்து
தயங்காமல் பொய்சொல்வாய்...
தடையங்களில்லாது - வீட்டில்
திருடவும் செய்வாய்...
இதற்குமேலும் - அதற்கு
குணங்குறிகள் உண்டு...
ஆனால்,
ஒன்று உனக்குச் சொல்வேன்-
வானவில்லின் வளைவை
நிமிர்த்திட நினைக்கலாம்...
வளைக்கரம் ஒன்றை
வளைத்துப் போடுதல்
அவ்வளவு சுலபமில்லை...
உன்னை வளையவந்தால்
பார்த்து நடந்துகொள்..!
இந்நோயினுக்கு - ஒருமுறை
இவனும் பலியானவன்...
நண்பனே..!
இது கடிதம் அல்ல -
காதலின் ஒருவடிவம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குறுதி...

வானமே.!
எனக்கொரு வரம் தா...
வளமுடன் மண்ணை
பாதுகாப்பேனென்று...

பூமியே...!
எனக்கு நீயின்று
புதிதாய் சொல்...
புல்களின் இடையிலேயும்
புதையல்கள் தருவேனேன்று...

ஒளியே...!
தினம்தினம் நீ
ஒளிந்து கொள்ளாதே...
இந்த உலகில்
ஒரு நாளென்றாலும்
நிலைத்து நில்லு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருணனே...!
வறட்சியில் வாடையால்
உயிர்களை வாட்டாதே...
வருசம் முழுவதும்
வசந்தமே வரச்செய்...

நீலம்சுமக்கும் கடலே...!
தினமும் நீ கரையாதே...
கைகட்டி கண்மூடி
மௌனம் கொள்...

ஞாலத்தைநிறைத்த நீரே...!
ஓரிடத்தில்நீ நிலைக்காதே...
வறண்ட பூமிக்கும்
ஒருமுறை வந்துபோ....

பகுத்தறிவுள்ள மனிதனே...!
எனக்கு நீயொரு
சத்தியம் செய்துதா...
புனிதனாய் புவியினில்
வாழ்வேன் என்று...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் கதவு திறக்கும்

அடி பெண்ணே...!
உன்னை நீயே
படம்போட்டுக் கொள்...!
இப் பூவுடல் -
பூதவுடல் ஆவதற்குள்
பூவுலகில் பெண்கள்
புழுங்கி மழுங்குவதேன்..?
மாதவம் செய்துதான்
மங்கையரைப் பெற்றனரோ...
இல்லை... இம்மண்ணில்
மாதவம் செய்துதான்
மங்கையர் -
நல்மாந்தராய் வாழமுடியுமோ...?
இது என்ன விந்தை...
எங்குமில்லாதபடி
தமிழ்பெண்களுக்கு மட்டும்
ஏனிந்தத் தலைவிதி...?
பண்பாடும் கலாச்சாரமும்
பெண்களுக்கு மட்டுமா
சொந்தமென்று சொன்னார்..?
ஆண் பிள்ளைகள்
அனைத்தையும் அடியோடு...
சாதித்துவிட்டு வந்து
அசந்து தூங்கலாமா...?
அடி பெண்ணே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ உரத்துக்கேள்...!
வழியொன்று பிறக்கும்...
இந்த நாட்டில் மட்டும்
ஏனிந்த அவலம்...?
இலட்சக் கணக்கில்
சீதனம் - சீர்வரிசைகள்...
பெண்களில் இச்சைகொண்டு
பிச்சைக்காரனைப் போல்
பின்னால் சுற்றுவதும்
காதல் வலைவீசுவதும்
கண்ணடி வைப்பதுவும்
கன்னிகளையே விழுத்தும்நோக்கில்
மேடைகளில் ஏறி -
'பெண் விடுதலை' என்னும்
பல்லவி பாடுவதும்
வாடிக்கையாகிப் போனது..
இதில்வேடிக்கை எதுவெனில்,
பின்னாளில் மணமேடையில்
மணப்பெண்ணுக்கு முன்னர் -
பலர் தலைகுனிகின்றனர்
அவருக்கும் நாணம்...
அது நாணயத்தால் வந்தது
சீதனத்தை முன்கூட்டி
செவ்வனே செருகிக்கொண்டானே...
அடி பெண்ணே...
நீ விழிப்பாயிரு...!
விட்டில் பூச்சியல்ல -
நீ விடிவெள்ளியாகு...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் எதிர்காலத்தை
நீயே தீர்மானித்துக்கொள்...!
அதற்கான அத்திவாரத்தை
ஆழமாக இட்டுக்கொள்....!
திடமாகத் திட்டமிடுகின்ற
தைரியத்தை கூர்மைப்படுத்து...!
பெற்றோரின் பெறுபேறு
உனக்கு சாதகமாகட்டும்...
ஏனென்றால்,
பல சகோதரிகளுக்கு -
சாபங்களே வரமாய்
வந்து கிடைத்ததுண்டு...
நான் சொல்லும் வரம் -
வாளாய்வந்த வரன்களைத்தான்...
இந்த வாழ்வில் - நீ
சிக்கி சிதறவேண்டுமா...?
இதிலிருந்து விடுபட்டு
வெளியேறிட ஞானம்பெறு...!
நல்லவற்றைக் கண்டறி
ஞாலத்துப் பெண்களில்
நீ வேறாகி -
வெளிச்சம் போடு...!
காலம் உனக்குக்
கதவு திறந்துவிடும்....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிதாகப் பாடு

இயற்கையை இறைவன் படைப்பினை
செயற்கை உவகைக் கவியால்
செப்புவதில் பயனில்லை
நன்றாக ஈழமது மலர்வதற்கு
நற்கவியாலே வீரமூட்டிப்புது
கவிதைபாடப் புறப்பட்டுவா தோழா

கன்னியழகை கண்டு மயங்கியதை
காதலில் தோல்வியைத் தழுவியதை
கவியாக்கித் தருவதில் பயனில்லை
இன்னல்கள் மத்தியில் நாளும்
இடருறும் நம்மினத்தின் விடிவுக்காய்ப்பாடி
படைதிரட்டு என் கவித் தோழா

தலைக்கனத்த உண்டாக்கும்
தனிமனித புராணம் பாடி - உன்
விலையிலா வித்தையை பாழாக்காதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நத்தையாய் ஆமையாய் - இனியும்
நம்மினம் வாழாது மீள்வதற்காய்
சத்தான கவியால் சகத்துக்கு வழிகாட்டு

மங்கையிடம் மனதை பறி கொடுத்த
சங்கதிகளால் சகத்துக்குப் பயனேது
இங்கே நம் உறவு இரத்தத்தில் நீந்தும்
இழி நிலையை எடுத்துப் பாடு
எரிகின்ற எம் தேசம் உன் கவியால்
அணைய இனிய கவிபாடு என் தோழா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லு தூது சொல்லு

விண்ணோடு விளையாடும் வெண்ணிலவே
விரைநடந்திங்கு இறங்கியேவா - இரு
கண்ணீரில் கவிபாடும் பெண்ணிவளின்
கண்புகுந்தவன் கதைகேட்டு வா...

மண்மீதில் வாழுகின்ற மாந்தர்க்கு
மகிழ்வினிலே பாகுபாடு ஏனோ - ஒரு
பெண்ணாக உருவான பேதையர்க்கு
பெரும்பாலும் பெருஞ்சோகம் தானோ...?

எண்ணிரெண்டு வயதென்றால் எனக்கு
ஏதும் கவலையில்லையடி - என்
கண்ணிரெண்டின் கதைகேட்டால் உனக்கு
சூழும் கவலையெல்லாம் புரியுமடி...

பண்பாடு தமிழர் காதல் வீரமிப்
பாரறிந்த விஷயமல்லவா - இளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்பாடும் பாட்டைப் பகிர்ந்தவர்
பெயரைக் காக்கச் சொல்லிவிட்டுவா...

என் மானம் சிறிதின்று, எம் மானம் தமிழர்
தன் மானம் பெரிதென்று சொல்லு
என் மனம் உருகுதடி அதற்காக - அவரின்
நல் மனம் மாற்றிவரச் சொல்லு.

பெண்மானம் காத்திங்கு வாழவென்று
பொருளீட்டப் போனவர் வாராவிடில்
மண்மானம் காக்கப் புறப்படுவேன் - இல்லை
மகிழ்ச்சியுடன். மடிவேனடி போரில்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிவுவரும்

வான் மீது நீந்தும்
மேகமானேன் நானே
வருந்துயர் எல்லாமே
வருந்தி வரவேற்றேனே
கானகத்தில் தவறிய
கன்றாகிப் போனேன்
கருகிய நினைவுகளில்
கலந்துவிட்டேன் நானே
மானிடத்து மகிழ்ச்சியிலே
மருண்டு போனேனே
மற்றவர்கள் துயர்துடைத்து
மங்கிப்போனேன் நானே
தொற்றிக் கொண்ட கவலைகளில்
தொல்லை கொள்ளலானேன்
துன்பத்தின் துயிலிடத்தில்
துகில் வாங்கினேனே
அலைகடலில் சிக்கிய
அரும்பாகிப் போனேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவருத்துப் பிறர் பார்க்கும்
பொருளாகிப் போனேனே
விருப்பு வெறுப்புகளை
விலக்கிவைத்தேன் நானே
விடியல் ஒன்றுக்காகத்தானே
விழிப்புக் கொண்டேனே
விருப்பம் அது வென்றே
வெளியில் சொல்வேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சேதி

தென்றல் தொடத் தேகம் சிலிர்த்த நாள் போனது
தெரியாத கருவிகளைத் தேடி மனம் துடிக்கிறது
தேர்கள் எரிந்திங்கு தெய்வங்களும் போனது
தெள்ளுதமிழ் தேசம் தெரியாமல் தேய்கிறது
ஏர் உழுத நிலமெல்லாம் எரியுண்டு போனது
எங்களது தேசத்தை எப்போதுத்தான் மீட்பது.

காலையிலே பூத்தமரம் கருகி எரிகிறது
கண்ணிவெடிவைக்க என் கைகள் துடிக்கிறது
மாலைவேளை வந்தாலே மனம் கொதிக்கிறது
மறு நாளின் விடிவதனை மரணபயம் தடுக்கிறது
வேலைதேடிப் போனநீங்கள் வருவதெப்போது
வெளிநாட்டில் வாழ்பவர்கள் விரைந்து வருவதெப்போது?

பொல்லாத வெறியர்களின் பேயாட்டம் நடக்குது
பொட்டிழந்து பூவிழந்து பெண்கள்குலம் மடியுது
எல்லைப்புற நகரங்களில் ஏதேதோ கேட்குது
எருமைகளின் கூட்டமாய் குடியேற்றம் நடக்குது
பொன்னான எம் மண்ணை மீட்டெடுத்து தருவதெப்போது.

பதுங்கு குளியான இடம் பாசறையாய் மாறுது
பகல் பொழுதில் மட்டும் சனம் பாதுகாப்பைத் தேடுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒதுங்கி வாழ நம்மினம் ஒவ்வாது வெறுக்கிறது
ஒப்பந்தம் செய்ய அரசு ஒப்பாரியாய் பாடுது
வெம்பி வெதும்பி வெட்டியாய் எத்தனை நாள் வாழ்வது
வேரோடு பகையழிக்க எப்போதுத்தான் வருவது?

சோகத்தைச் சொல்வதற்குச் சொந்தமின்றிப் போனது
சோறின்றி நாள் பலவாய் சோர்வாகக் கழியுது
தேகத்தில் மட்டும் புதுத்தெம் பொன்று நிலைக்குது
தெய்வத்தை நம்பியது தேவையற்றுப் போனது
வாரத்தில் முழுநாளும் வழியை விழிபார்க்குது
வருவார் அத்தான் என இவள் மனது துடிக்குது.

அடிமையாய் வாழ்ந்தகாலம் அடிபட்டுப்போனது
அடிவருடிக் கூட்டங்களும் அழிந்தொழிந்து போனது
கொடிகட்டி வாழ்ந்தகாலம் கொஞ்சநாளில் வருகுது
கொள்கையிலே பற்றுக்கொள்ள இவள் மனமும் நாடுது
முடிவாக ஒன்றைச் சொல்ல முடியாது உள்ளம் துடிக்குது
பிடிபட்டால் என் கழுத்தில் குப்பியொன்று இருக்குது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்ந்து கொள்

விலைபோகும் ஆண்மகனே-நீ
விலைமகனாய் ஆகிவிட்டாயே
சிலையொத்த பெண்ணொடு வாழ
சில்லறை கேட்கிறாயே
கலை கலாச்சாரம் பண்பாட்டை-நீ
கடுகளவும் எண்ணிடாமலே
விலைமகனாய் மாறியதாலே
வெட்கித் தலைகுனிகிறேனின்று.

வங்கிக் கணக்குகளையும்-நல்
வளமான சொத்துக்களையும்
தங்கி வாழ வீடுவாசலுடன்
தங்கத்தின் தரம்பார்க்கும்-நீ
மங்கலம் நிறைய வந்தவளை
மகிழ்வுடன் வாழவைப்பாயா-இல்லை
பொங்கிப் போட அவளை வைத்து
பொய் வாழ்க்கை வாழ்வாயா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலித்து கன்னியரை மயக்கிவிட்டு
காசுதந்தாலே தாலியேறுமென்று-மனம்
பேதலித்து உளறுகிறபோது
காதலங்கே இறந்தல்லவா போகிறது
காசுக்காய் அலைகின்ற காமுகனே
காதலுக்கு அர்த்தம்தான் புரியுமா?
காதலிலே காதலது உயர்கிறது-நீ
காதலைச் சாகடித்து உயர்கிறாயா?

உன்னோடு சீதனம் முடியட்டுமே
உண்மை இளைஞர்கள் உணரட்டுமே-இம்
மண்ணின் பிணியொன்று மறையட்டுமே
மகிழ்ச்சியால் கன்னியர் பாடட்டுமே-இல்லை
உன் மகளின் சீதனதுக்கு நீ அலைவாய்
உறக்கமும் நிம்மதியும் நீ மறப்பாய்
பெண் கேட்கும் இளைஞரை வெறுப்பாய்-இப்
பெரும் பிழையை அப்போது நீ உணர்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையற்ற நிலை

சங்கம் வளர்த்த தமிழர் நாங்கள் என்போம்
சங்கமிக்கும் போதினிலே 'டொச்சில்' கதைப்போம்
எங்கள் வீட்டு பிள்ளைக்கும் தமிழை மறப்போம்
எதிர் வீட்டு 'ஜேர்மன்' காரனைப்போல நடப்போம்.

வந்த காலம் வாழ்ந்து செய்த சாதனைகளை
வடிவான 'போட்டோ' வாங்கி 'போஸ்டில்' அனுப்புவோம்
இந்த மாதிரி சொந்த வாழ்க்கை வாழாதவன்
எதற்கும் உதவாதவன் என்றொதுக்கி வைப்போம்.

தண்ணியடி விளையாட்டுப் போட்டிகளும் வைப்போம்
தள்ளி நின்று பார்ப்பவரைச் சேர்ந்து அரவணைப்போம்
எண்ணிரெண்டு நாளில் பெருங்குடிமகனாய் மாற்றும்
எண்ணற்ற வித்தைகளை அவருக்கும் சொல்வோம்.

இங்கு மங்கும் ஓடியே இரண்டுவேலை செய்வோம்
இரண்டு வேளை உணவை ஒன்றாக்கிக் கொள்வோம்
தங்கத்தை தகதகக்க அங்கமெங்கும் அணிவோம்
தரம் பார்த்துப் பெண்ணெடுக்க தரகரை அழைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் ஐந்து லட்சம் போடுமாறு செய்வோம்
வடிவில்லை என்றால் இன்னும் அரை கேட்போம்
வங்கக்கடல் கடந்து வருகின்ற பெண்ணிடம்
சங்கிலியும் சட்டைத்துணியும் எடுத்துவரச் சொல்வோம்.

இங்கு நாங்கள் புரிந்துவைத்த தில்லுமுல்லுயாவும்
இலங்கைவரைப் போகாமல் இடையினிலே தடுப்போம்
அங்கிருந்து வரும் பெண்ணாள் பிறந்த நாள் தொட்டு
அடுக்கடுக்காய் செய்தவற்றை ஆள்விட்டுக் கேட்போம்.

சங்கதிகள் அறிந்தவள் சண்டையேதும் செய்தால்
சத்தமேதும் வராமல் அறையில் வைத்து அடைப்போம்
பொங்கிவைத்து பொழுது முழுதாய் காத்திருக்குமவளை
பொடியன்கள் கண்ணில் படாது பூட்டிப் பாதுகாப்போம்.

கற்றதையும் மற்றதையும் கடுகளவும் நினை யோம்
கடல்தாண்ட முன் வாழ்ந்த வாழ்க்கையையும் நினை யோம்
சுற்றிவருகின்ற செக்கு மாடொன்றாகத் தினமும்
செய்த வினையனைத்தையும் புதிதாகச் செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைமாறு

உயிரோடிருக்கும் போதினிலே
உயிலெழுதும் மானிடனே
ஊர் சொல்லுமுன்னரே-உன்
பேரை ஏன் கொல்லுறாய்...?

பயிர் வளர்த்தவன் எங்கோ
பசித்திருக்கும் வேளையிலே
பணங்கொடுத்து விட்டு-நீயிங்கு
பசியாறுவது எப்படி....?

கடலோடி வலைவீசியவனோ
கரைவந்தே கவலை மறக்க
உடல்வியர்வை காணாத-நீ
ஊமார எப்படி மகிழ்வாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிசூடும் மன்னனாயினும்
முடிதிருத்த ஒருவன் தேவை
பிடிசாம்பலாகும் முன்பே-உன்
பிடிவாதத்தை விடுவாயா..?

சும்மா இருந்து விட்டு
சுயசரிதம் எழுதுகிறாயே
இம்மாநிலத்துக்கு ஏது செய்தாய்
எப்போதாவது எண்ணினாயா...?

கைமாறாக எதையும் எதிர்பார்த்து
கைநீட்டிப் பழகிப்போனாய்-உன்
அம்மாவின் தாய்ப்பாலுக்கு
எதை(நீ) கொடுத்து நிறைத்தாய்..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவமும் வரமும்

விழி வழி
கண்ணீர் விடைபெறட்டும்...
விழிகளில்
பார்வைக்கு வழிவிடட்டும்..
உடைந்து போன
கண்ணாடியாய் இவள் மாற
யார் பொறுப்பு...

தேகத்தின் தேய்வு
தேவதை இவளிடமா குடியிருப்பு
தெய்வத்தின் பார்வை
இவளுக்கு ஏன் மறுப்பு...
இவள் இன்று
மெழுகாய் உருகுதற்கு
யார் பொறுப்பு...
உருக்குலைவு என்பது
இவள் உருவில் பிறந்ததா
பாவத்தின் தண்டனையா இது?
தனிமை இவளுக்கு
பரிசளிப்பாய் கிடைத்ததா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ...
இது ஒரு வகை தவம்
இரவும் பகலும் தொடரும்
இவளின் தவம் நீண்டது
கண் புகுந்தவன்
இவள் கண்முன்னே
தோன்று வரைக்கும்
அது நீளும் நிலைக்கும்...
ஆனால்,
இந்தப் பாவிப் பெண்ணோ
அவனின் கதையை
அறிய நியாயமில்லை.
ஏனென்றால்.
இவள் கண்ணாளன்
கண் காணாத உலகில்
சஞ்சரித்து விட்டானே...
பேதை இவள்-அவன்
பேரை வேதமாகவல்லவா
உச்சரித்துக் கொண்டிருக்கிறாள்...
இறைவன் இவளுக்களித்தது
பெரும் சாபமா?
சாபம்-
தவம் செய்பவர்க்கு
வரமான தெப்போது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனயாகம்

தனிமையில் இந்த மயில் தவிக்குது
தலைவனை எண்ணிப் பரிதவிக்குது
இனிமையைத் தேடிநிதம் வெதும்புது
இறைவனை வேண்டியிங்கே துதிக்குது

புயலொன்று வீசியிங்கே போனது
புள்ளினம் ஒன்றையொன்று பிரிந்தது
கயல் கொண்ட விழியிங்கு கலங்குது
கண்களிலே கானலைச் சுமந்தது.

நாளும் நாளும் நாயகனை நினைக்குது
நாவினிலே அவன் பெயரே நிலைத்தது
பாழும் கொடும் விதியை மனம்சபிக்குது
பாவை வாழ்வோ பாலைவனமானது.

சோதனைகள் இவள் சொந்தமானது
சொல்லொனாது பேதைமனம் வாடுது
வேதனைகள் உள்ளமதை வாட்டுது
வெம்பியியந்த வெள்ளைப் புறாவேகுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலலையாய் நினைவுகரை புரண்டது
காலங்கள் கனிந்து வரக் காத்திருந்து
மடல்வேண்டி மகிழ்ச்சியை அடைகாத்தது
மங்கையுள்ளம் உறவுக்குத் துடிதுடித்தது.

இங்கு மீண்டும் வசந்தம் வரப் பாடுது
இடைவெளி விலக்கியோட வேண்டுது
சங்கொலி கேட்க மனம் இரங்குது
சடைபின்னிப் பூச்சூட விரும்புது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதில் வேண்டும்

வாரம் ஒரு வரம்தர
வருகின்ற தேவதையே
தாரம் இவனுக்கென்று-நீ
தராதரம் பார்க்கிறாயா?
ஓரம் பார்க்குமுன் விழிகள்
ஒதுங்கி நிற்பது மேன்?
பாரம் தாங்கிடாத கூந்தல்
புஷ்பத்தால் படர்வதை
நானும் பார்க்கிறேன்தானே...
நேரம் வரும்வரை
நினைப்பில் இருக்கவிடாத
ஈரப்புன்னகைக்காய்-இவன்
எப்போதும் ஏங்குகிறான்...
வீரம்காட்டி விளையாட
வீட்டில் இடமில்லை-
விட்டிலைப் போல் சுற்றுகிறேன்
விடையொன்று தருவாயா?
கட்டிலுக்கும் தொட்டிலுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரம்பற்ற ஆசையில்லை...
கட்டழகில் மயங்கியிந்த
காளையிவன் வீழவில்லை...
பொட்டுவைத்து பூமுடித்த
கட்டான பெண்ணொருத்தி
வீட்டில் விளக்கேற்ற வென-
என்னை பெற்றவள்
எந்நாளும் தேடுகிறாள்...

உன்னிடம் இதை-எப்படி
சொல்வதென்று தெரியாது
விடிகாலைப் பத்திரிகையில்
விளம்பரம் கொடுக்கிருக்கிறேன்
படித்துப் பார்த்துப் பதில் தருவாய்
அதில் என் தாயின்
மகிழ்ச்சியையும் தருவாய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையும்
# தேகமும்
# தேசமும்

நோய் நொடி என்று நான் நொந்து கிடக்கிறேன்
நோகாமல் உனைவளர்த்தாளாக்கிவிட்டவுன்
தாயும் எத்தனை நாள் தவமிருந்தாள் உனக்காக
பாயில் கிடந்தும் உன் பலகதைகள் சொல்லிப்போனாள்

பார்வையில் பாதி பறிபோய் நாட்கள் பலவாயிற்று
பார்க்கத் துடிக்கின்றேன் உனைமட்டும் தானே
நாராய் என்னுடல் நலிந்து குலைந்திற்று
நல்லுறுதியாய் இருக்கிறேன் உனைக் காண்பேனென்றே

நடைதளர்ந்து நாட்கள் கோடியானதடா - மகனே
நானின்னும் உனைத்தேடி நாளும் நடக்கின்றேன்
கடைவழிப் பாதை தெரியும் வரை - நான்
காத்திருப்பேன் உனக்காய் கண்டிப்பாய் வந்துவிடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றதாயைவிட தாயகமே பெரிதென்ற
பெரியதத்துவத்தை தரணிக்கு நீ சொல்லலாம்
உற்றார் உறவினர் உடன் பிறப் பெதுவுமின்றி
உழலுகின்ற தந்தையை ஒரு தரம் வந்து பாராயோ.

'பாஸிஸ' கரங்களால் மாண்டோர் பல்லாயிரம்
பாரிஸவாதத்தால் பலர் படுத்த படுக்கையாயினர்
பயங்கர நோயினாலும் பாடையில் பலர் போயினர்
பாவி நான் உனக்காக படுக்கையில் நாட்களை என்னுகிறேன்

தேசத்துக்கு சேவை செய்ய (வென்று) செருக்களம் புகுந்தாயே
தேவை நம் விடுதலை என்று தேசங்களுக்கு சொல் மகனே
தேகத்தைக் களத்தில் விட்டு தேவலோகம் போனாயோ
சேதி சொல்லயாருமில்லை காத்திருக்கேன் என் மகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கு கொள்வோம்

தோழி தோள் கொடுக்க வா நீ
தொடர்கதையாம் விடுதலையின்
தொடக்கத்தை படித்துப்பார் நீ
தொடராமல் முடித்து வைப்போம்
துடிப்புடனே விரைந்து வா நீ
தொட்டதை துலங்க வைப்போம்
துன்பங்களைத் துடைத்தெறிய
துப்பாக்கி ஏந்துவோம் வா நீ.

முரசறைந்து போர் தொடுத்து
முடிசூட்டி வாழ்ந்த பரம்பரை
முறத்தாலே வேங்கை கதை
முடித்தவளாம் நம் மூதாதை
முழுமையாக முயற்சி செய்தால்
முடியாதது எதுவுமில்லை
முழுமனதாய்ப் பெண்கள் வந்தால்
முந்தியே கிடைக்குமடி விடுதலை.

பாரதிக்குப் பாடல் செய்வோம்
பார்போற்ற பேர் எடுப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரதியாய் நாமே ஆவோம்
சகலத்தையும் நாமே செய்வோம்.

சோறு பொங்கிப் போடும் வாழ்வை
சுத்தமாக நாம் எதிர்ப் போம்
வீறு கொண்டு எழுந்து வாநீ
விடுதலையை வென்று வருவோம்.

தாய் மண்ணை மீட்டெடுக்க
தாய்க்குலம் வருவதில் தவறேது
வாய் வார்த்தைகள் போதாது
வந்து குதித்திடடி களத்தினிலே
நோய் என்று பாயில் விழும் பாழுடல்
நாட்டுக்காய் களத்திலே வீழட்டுமே
நம் தேசவிடுதலை நம்மால் கிடைக்கட்டுமே.
நாளை நம்சரித்திரத்தை நாடே படிக்கட்டுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞன்

பாடுபடும் மக்களைப் பாடுபவன் நான்
பழந்தமிழ் இலக்கியத்தை தேடுபவன் நான்
நாடுபடும் பாட்டையின்று சாடுபவன் நான்
நலமாகத் தமிழன் வாழப்பாடும் கவி நான்.

கூட்டைவிட்ட குருவியாகப் பறப்பவன் நான்
குழந்தையுள்ளம் கொண்டவரைத் தேடுபவன் நான்
சாட்டையாகப் பாட்டெழுதிப் பாடுபவன் நான்
சமூகத்துக்கு சங்கதிகள் சொல்லும் கவி நான்.

திங்களதை மங்கைக்காய் திருத்துபவன் நான்
திரைபோடும் மேகங்களை நிறுத்துபவன் நான்
கங்கையைப் போல் பொங்கி எங்கும் ஓடுபவன் நான்
கரையாத சீதனத்தைக் கரைக்கும் கவி நான்.

கற்பனையில் காலமெல்லாம் வாழ்பவன் நான்
கனவுகளைக் காதலிக்கும் கைக்குழந்தை நான்
நற் செயலைச் சொற்களிலே செதுக்குபவன் நான்
நனவாக நாள் முழுதும் உழைக்கும் கவி நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளங்களை எழுத்துக்களால் உழுபவன் நான்
உதவாத உறவுகளை கழுவுகிறவன் நான்
கள்ளமில்லா நெஞ்சுடனே கலப்பவன் நான் - மனக்
கதவுகளைத் திறந்துவிடும் இனிய கவி நான்.

கோல்கொண்டு கோடேறும் நீதிபதி நான்
கோபது பாவமென்று கூறுபவன் நான்
காலூன்றி கருத்துக்களை விதைப்பவன் நான்
கவிதையாலே உலகையாளும் கவியரசன் நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகுகள் வேண்டும்

சிரிப்பைத் தொலைத்து
நெருப்பைச் சுமந்து
சிறையில் வாடுகிறேன்...
வெறுப்பில் வெடிக்கும்
இதயத்தைக் காட்ட
சிறகுகள் வேண்டும் எனக்கு...
சிறையின் அறையில்
சித்திரவதைக்குள்
சிறு பிறையானேன் நான்...
மறையாக இன்று
மாறிய ஈழத்தை வெல்ல
சிறகுகள் வேண்டும் எனக்கு...
குறைப்பிரசவ கூட்டத்தை
முறையாகப் படிப்பிக்க வேண்டும்
உறையாத தயிராய்
உயிருடன் போராடும்
உள்ளத்தை உருவேற்ற
சிறகுகள் வேண்டும் எனக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் வற்றிப் போனதாலே
தமிழீழ மெங்கும் வெடிப்பு
நீர் வார்க்கத்துடிக்கிறேன்
சிறகுகள் வேண்டும் எனக்கு...
கண்ணீர் வார்த்து - குருதி
கறையைக் கழுவுகிறேன்
வெந்நீர் சுமந்து
வேகுகின்ற தேகங்களை
ஆற்றிவிட - ஆறவிடுவதற்கு
சிறகுகள் வேண்டும் எனக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீயும் நானும்

நீ இங்கு வந்த அந்நேரம் - அன்பே
நிலைமாறிப் போனேனே நானே
நீங்காத பாரம் ஒன்றென் நெஞ்சில்
குலைந்தோடக் கண்டேனே நானே

வான் மீது நீந்துகின்ற மதியாக - நீயும்
வந்திங்கு சேர்ந்தாயேதாயே
வளங்கொண்டு சொரிந்து மீளும்
வர மொன்று தந்தாயே தாயே

எனக்காக வென்று எழுந்தகலைவடிவே
உனக்காக வென்று உயிர் வாழ்ந்தேனிங்கே
கணக்காகத்தானே காதலிலே கழித்தோம்
கனவுகளில் வாழ்ந்து நனவாக சேர்ந்தோம்

சொந்தங்கள் பந்தங்கள் சூழட்டுமங்கே
சொர்க்கத்தின் கதவுகள் திறக்கட்டுமிங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமும் இனிமையும் வழிந்தோடும் வேளை
இயலோடு இசைபாடு என்னிள மானே.

பாதியுயிராய் நின்று பரிதவித்த - எனக்கு
மீதியுயிர் தந்து மீட்பித்தமாதே
போதுமினி இன்பமென்றாகும் வரையில் - முழு
பொழுதுமினிக் களித்திருப்போம் மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை வேண்டும்

வாழ்வில் வரும் துன்பம் விலகிட வேண்டும்
வராத இன்பமெலாம் வந்துசூழ வேண்டும்
தாழ்விலே கலங்கிடாத நல்மனம் வேண்டும்
தருமம் செய்திட தனம் சேர வேண்டும்.

வளரும் இவ்வுலகின் வளம் பெருகவேண்டும்
வளமான நல்வாழ்வு அனைவருக்கும் வேண்டும்
தளிரும் வன்முறைகள் விலகிவிட வேண்டும்
தளராத நெஞ்சுறுதி தந்தருளவேண்டும்.

சொந்தமண்ணில் யாவருக்கும் சுதந்திரம் வேண்டும்
சுகமோடு அனைவரும் சேர்ந்து வாழ வேண்டும்
எந்த சக்தி வந்தாலும் இணைந்திட வேண்டும்
எதிரிகள் இல்லாவாழ்வு எவருக்கும் வேண்டும்.

பந்தபாசங்களில் இருந்து விடுதலைவேண்டும்
பசி பிணி வாராது பார்த்தருள வேண்டும் - எனக்கு
இந்த உலகில் இருந்து விடுதலை வேண்டும்
இனிமேலும் பிறக்காமல் விடுதலை வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழைப்பு

இளையவனே எழுந்து வா...
இரு தோளும் உரமேற்றி...
பிழைகளை பிடுங்கிவைப்போம்
பித்தர்களைக் கலைத்திடுவோம்
சத்தமிடும் சாதிப் பேய்களுக்கு
சாவு மணியடித்திடுவோம்...
இந்த உலகம் நமதென்று
எடுத்துச் சொல்ல
எழுந்து வா இளையவனே...
பழமையை மாற்றியிங்கே
புதுமைகள் செய்துவைப்போம்
வழமை இதுவென்று
வாதிடும் பழமைவாதிகளுக்கு
வடிவாக பாடம்சொல்வோம்
உழைக்காமல் உண்போரை
உழவர்களாய் மாற்றிடுவோம்
நிலம் முழுதும் பயிர் செய்வோம்
நித்தியமும் நாமுழைப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியத்தை நிலைநாட்ட
சாகும்வரை போரிடுவோம்
சீதனம் கேட்கும் சிறியவரின்
சிரம்கொய்து சீர்செய்வோம்
ஆதனத்து அடிமைகளை
அடைத்து வைத்து திருத்திடுவோம்
சிறிய எம் தேசத்தை
சிதையாமல் பாதுகாப்போம்
இன்னும் செய்வோம்
எழுந்து வா இளையவனே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை

எனக்கு வருகின்ற
தாலிக் கயிறானது
என் தந்தையின்
தூக்குக் கயிறாக
ஆகி விடக்கூடாது
எனக்கு வேலியில்லாமல்
போனாலும் பரவாயில் லை
என் தாயின் தாலியாவது
நிலைத்து நிற்கட்டும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீயாகும் பூக்கள்

யார் இட்டசாபமோ - இல்லை
நாம் செய்த பாபமோ தோழி...

பார்போற்ற வாழ்ந்தவர்கள்
பல்திசையும் ஆண்டவர்கள்
யாருமற்ற அனாதைகளாய்
யமனுலகு போகும் இந்நிலைக்கு

யார் இட்ட சாபமோ - இல்லை
நாம் செய்த பாபமோ தோழி...

நேர்வழியில் நின்றுழைத்து
நெடுநாளாய் பொறுமை காத்து
போர்வழியில் போய் இன்று
பொருதி உயிர் மீட்கும் நிலைக்கு

யர் இட்ட சாபமோ - இல்லை
நாம் செய்த பாபமோ தோழி...

ஊர்விட்டு ஊர்சென்று
உடமைகளையும் பறிகொடுத்து
நேர்மையற்ற நீசர்களால்
நம் தமிழர் அருகும் நிலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் இட்ட சாபமோ - இல்லை
நாம் செய்த பாபமோ தோழி...

ஏர்பிடித்து பசியும் நோக்கி
எமதீழத்தை வளமாய் ஆக்கியவர்
நார்உரிந்த நல்மரமாயின்று
நலிவுற்று நாசமாகும் நிலைக்கு

யார் இட்ட சாபமோ - இல்லை
நாம் செய்த பாபமோ தோழி...

தேரின்றி திருவிழாவுன்றி
தெய்வங்களை வேண்டி இன்று
வேர் அறுத்த பெருமரமாய் - தமிழர்
வேதனையில் வீழ்கின்ற நிலைக்கு

யார் இட்ட சாபமோ - இல்லை
நாம் செய்த பாபமோ தோழி...

கார் என்றும் கடமையென்றும்
கையேந்திய கயவர்போக
போரில்தான் புலரும் புது ஈழமென்று
புறப்பட்டுப் புயலானவர் நிலைக்கு

யார் இட்ட சாபமோ - இல்லை
நாம் செய்த பாபமோ தோழி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னரும் நண்பனுக்கு

உனக்கொன்று சொல்வேன் - நண்பனே
ஊரைவிட்டு இங்கே ஓடிவராதே
எனக்கென்று தனியாக வாழத்துணிந்து
என்னரும் நாட்டை மறந்து வந்து
கனக்கின்ற நெஞ்சுச் சுமையுடன் - இங்கே
கலங்கிப்போய் நிற்கிறேனடா நான்.

வீட்டிலே இருந்த காலத்தில் - பொழுதை
வெட்டியாய் கழித்துவிட்டேன்
வெள்ளிக் காசுக் காசை கொண்டு
வெளிநாட்டுக்குத் தாவி வந்துவிட்டேன்
சல்லிக் காசுக்கும் வழியில்லாமல் - இங்கு
சந்தியில் நிற்கிறேனடா நான்.

உயிரைத் துச்சமென எண்ணியங்கே - என்
உடன் பிறப்புகள் ஆயுதமேந்த
உடுத்த துணிமட்டும் மிச்சமென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினர்கள் இரவுபகலாய் விழித்திருக்க
படுகுசியாய் இங்கு பறந்து வந்தேன் - இன்று
படுகுழியில் விழுந்துவிட்டேனடா நான்.

தாய்த்திரு நாட்டை மறந்து - இன்று
தப்பிப் பிழைத்து ஓடிவருவோரை
நாயிலும் கீழ்த்தரமாகவே - நாளை
நம்மவர் மதிப்பிடுவாரடா
நானதில் அடங்கிப்போனேன் - நண்பா
நானிதையே உனக்குச் சொல்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமைகளைத் தந்துவிடு

உன் ஞாபகங்களை
என்னால் மறக்கமுடியவில்லை...
நீ எப்படியோ?
மகரந்த மணிகளை
மண்ணில் தூவுகின்ற
எத்தனை இனிய மாலைகளில்
மரணமும் நம்மை பிரிக்காது
- என்று சபதமெடுத்தோம்...
நீ பிரிந்து போனாய்-
என்னால் உன்னை
நினைக்காமல் இருக்க முடியும்..
உன் ஞாபகங்களைத் தான்
மறக்க முடியவில்லை...
சந்திக்கும் பொழுதுகள்
குறுகிப் போனதும்
பிரிவின் பின்
மாலை என்ன -
காலை கூட
நீண்டு போனதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு மட்டும் தானா...?
கண்களினால் காதலை-
பருகியதாலோ என்னவோ
தூக்கமும் காலியாகப் போனது
தூக்கத்தை தொலைத்ததை விட
என் இமைகளை இழந்ததினாலே
பெரிதும் கஸ்டப்படுகிறேன்...
தயவாய் கேட்கிறேன்...
நான் விழி மூட வேண்டும்...
நீ திருடிச்சென்ற என் இமைகளை
திருப்பித் தந்துவிடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனாஞ்சலியாகட்டும்

வசந்தமாக வந்து
இதயவாசல் தன்னைத்
திறந்துவிட்ட உனக்கு
நுழைவதற்கு-நான்
அழைப்பா தரவேண்டும்...?
என் நெஞ்சில் நின்று
என்னாளும் நடனமாடினாயே
ஏன் இப்போது
நிறுத்திக் கொண்டாய்...?
உறுத்தவில்லையா
உன் உள்ளம்தான்?
இதயம் அடிப்பது
உன்னை அழைத்துத்தானே...

இரத்தம்கூட
உன் பெயர்தன்னைச்
சத்தமிட்டு உச்சரிக்கிறதே...
இவை உனக்குக் கேட்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயமில்லைதான்...
இருந்தாலும்,
உன் மௌனம்
சம்மதத்திற்கு அறிகுறியல்ல
ஏனென்றால்,
என்-இதயத்தை நிறுத்தவும்
இரத்தத்தைத் தணிக்கவும்
உன்னாற்தான் முடியும்...
அதையாவது (இறுதியாக)
செய்துவிட மாட்டாயா?
பனி மேகங்கள்-என்
தனிமைக் கதைகேட்டு
கண்ணீர் சிந்துகின்றன...
இனியும் அந்தக்கதை
தொடராமல் இருப்பதற்கு
என் கதையை முடித்துவிடு...!
அப்போது உன் மௌனம்
எனக்கு அஞ்சலியாக இருக்கும்...!

- மே. 87, கலைவிளக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணித்த உறவுகள்

நான் உனக்காக எழுதிய
பாட்டுக்கள் எப்போதோ
பட்டுப்போய் விட்டனவே...
இப்போது, நான் கூடப்
பட்டுப்போய் விட்டேன்...
உன் கண்ணீரை வார்த்து
என்னைத்
துளிர்க்க வைக்கத் துடிக்கிறாயா?
பட்டமரத்தில் எப்போதாவது
பசுமை படர்ந்ததுண்டா?

தண்ணீரில் விழுந்து-நான்
தத்தளித்தபோது-இந்தக்
கண்ணீரைக் காணவில்லையே...
துடிப்பாய்-என நான் எண்ணினேன்
நீ நடிக்கவுமில்லையே...
இதயத்தில் ஈரமே இல்லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னுடைய கண்களில்
இப்போது கண்ணீரா...?

இதயத்தில் வடிந்த
உதிரத்தில் வடித்து
உருவான கவிதைகளவை,
நீயும் கண்ணீரால் கடிதமெழுதி
அவற்றைக் கரைக்கப் பார்க்கிறாய்...
கறைகளைக் கண்ணீர்
கரைத்து விடுமா-என்ன?
உதயத்தில் அஸ்தமித்த நம்முறவு
மீண்டும் உயிர் பெறுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னவென்று சொல்வேனடி

சொந்தங்கள் தொடர்ந்தே வரும்
சொல்லிலடங்கா இன்பம் தரும்
பந்தங்கள் வாழ்வில் பசுமையாய்
படர்ந்திட்ட நம் உறவுதான்-அன்பா?

கிளைகளில் பறவைகள் கொஞ்சும்
இலைகளிடை மறைந்த கனிகளாய்
இதழ்களிலே உதிர்கின்ற வார்த்தைகளால்
இருவருமே இணைந்ததுதான்-நட்பா?

படபடக்கும் இமைகளுக்குள்
படம்வரையும் உன் விழிகள் போல்
துடி துடிக்கும் என் இதயத்துள்
துல்லியமாய் தெரிவதுதான்-காதலா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயகத்தை விட்டுவந்தால்-சிலருக்கு
தாய்மொழியும் மறக்கக்கூடும்-நம்
வாய் மொழியும் மாறாதிருக்கும் இந்
நேயத்திற்குப் பெயர்தான்-பாசமா?

நீண்டதொரு சாலை தன்னில்
நெடுதுயர்ந்த குளிர்மரமாய்
ஆண்டாண்டாய் வளரும் இவ்வுறவை
என்னவென்று சொல்வேனடி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமை

பொய்களையும் போலிகளையும்
நான் துயிலுயும் போது
நீங்கள் என்னை
தட்டிக்கொடுத்துப் பாராட்டினீர்கள்...
இப்போது,
கொத்தி விரட்டுகிறீர்களே...
நான் வாழ்ந்தது
காக்கையின் கூட்டில்தான்
நீங்கள் என்னைக்
குயிலென்று கூறுகிறீர்களே...
கண்டிக்கப்பட வேண்டியவர்கள்
தொலைவிலிருக்கிறார்கள்
என்னை-ஏன்
தண்டிக்கப் பார்க்கிறீர்கள்...?
நான், சிங்கமாகப் போகிறேன்-என்று
சிலர் அசிங்கமாகப் பேசினார்களாம்...
அப்படியென்றால்,
நான் எப்போதோ
இம்மாசனம் ஏறியிருப்பேன்...
நான் கற்றது
ஒற்றுமை என்ற பாடத்தைத்தான்
கேட்டதும், கேட்பதும்
அது ஒன்றைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவம் செய்யும் லயன்கள்

எங்கள் சுவாசக்காற்றின் உஷ்ணத்தால்
சூரியன் வருமுன் பனிவிலகும்
எங்கள் ஊதியம் பாதியாய் உறிஞ்சப்படுவதுபோல்
உதிரமும் அட்டைகளுக்கு உணவாகும்.
எங்கள் தேகத்தின் உதிரம் தேயிலையில் சேர்ந்ததால்
தேனீரின் நிறம் சிவப்பாகிப் போனது
எங்கள் வேகும் உடலின் வியர்வையினால்தான்
தேயிலைச் செடிகள் செழிப்பானது.
நாங்கள் உயர்ந்த மலைகளில் இருந்து நாட்டை
உயரவைக்க தினம் உழைத்தோம்
எங்கள் வாழ்வை உயர்த்த விண்ணப்பித்து நாடு
வாழ்ந்திட அங்கீகரித்தோம்.
நாங்கள் அந்நியர் என்ற பெயரைச் சூட்டி
அந்நியச் செலாவணியை ஈட்டிக்கொடுத்தோம்
எங்கள் முதுகெலும்புகளை முறித்தே நாட்டின்
முது கெலும்பை நிமிர்த்தினோம்.
நாங்கள் முடியாட்சியில் குடியேற்றப்பட்டோம்
குடியாட்சிவரை குட்டு வாங்கினோம்
எங்கள் குடியுயரும் நாளும் வராதா?
முடிவொன்றை விரைவில் தாராதா?

- ஏப்ரல்.89, தூண்டில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீராத சோகராகம்

நான்தான் ஞாயிற்றைத் துயிலெழுப்புவேன்
நாள்தான் கழியாமல் தனிமையிற் தவிப்பேன்
மாலை வந்தால் மயக்கத்தில் மூழ்கிடுவேன்.
மாலைவரும் நாளை எண்ணி மகிழ்ந்திடுவேன்
காலைவரைத் திங்களைத் தூங்க வைப்பேன்
காத்திருந்த நாட்களைக் கணித்துப்பார்ப்பேன்.

தனியாகப் பார்க்கும் கண்கள் காயப்படுத்துகிறதே
துணைக்குவரத் தென்றல் கூடத்தயங்கி நிற்கிறதே
இணையாக உலாவர உள்ளம்தான் ஏங்குகிறதே
எப்போதென்று நாள் கேட்டு பாதம் கூசுகிறதே
எண்ணிக்கையில்லா மலர்கள் நாளும் பூக்கிறதே
என்னைப்போல் ஏமாற்றத்தால் வாடிவீழ்கிறதே.

கண்ணுக்குள்ளே கனவுகள் வந்து துஞ்சும்
கண்ணாளனையே நிதம் தேடிடும் நெஞ்சும்
மனதுக்குள் மகிழ்ச்சிகள் கோரும் தஞ்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னவனில்லாது அழைக்குமா புது மஞ்சம்
எண்ணங்களோ வெளிப்பட்டு வர அஞ்சும்
எழுதிவிடத் தமிழுக்குமல்லவா வந்தது பஞ்சம்
கன்னத்தில் கண்ணீர் செய்த காயங்கள்
இதயத்தில் இரத்தமிடும் ஓலங்கள்
நெஞ்சில் உங்களின் நினைவுக் கோலங்கள்
நெருப்பாய்க் கொதிக்கிறது என்னுடைய தேகங்கள்
நேற்றுவரை தீரவேயில்லை - நேரிழையாள்
இவளுடைய சோக ராகங்கள்.

- தென்றல், ஜூலை- 87.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பிரார்த்தனை

வாழ்க்கை எனும் பொன்னேடு
வரைந்திட நான் அவளோடு
காமனே வந்து கவிபாடு
கணைகளை நீ எறிந்துவிடு!

வஞ்சியோ சிறு மயிற்பேடு
வார்த்தைகளோ செந்தேன் கூடு
வசந்தமே சற்று விலகிவிடு
வாழ்த்துக்களை நீ தொடு!

வாழ்ந்தால் உங்களோடு
இல்லையேல் மண்ணோடு,
என்றுரைத்த பெண்ணோடு–
சேர்ந்தேன் நான் பண்ணோடு!

வார்த்தைகளோ காற்றோடு
பார்வைகளோ முட்காடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதைகளோ மணல் மேடு
வாழ்க்கையோ இன்று சுடுகாடு!

நெஞ்சில் அவள்கூடு
நினைவுகளின் தொகுப்பேடு
நெருப்பே நீ எரித்துவிடு
நீடிப்பைத் தந்துவிடு!

துயரம் ஒரு நெடுங்கோடு
துன்பமெல்லாம் என்வீடு
இறைவனே எனை எடுத்துவிடு
இன்பத்தைக் கொடுத்து விடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேய்கின்ற தேசம்

எங்களது கண்ணீரைப் பார்த்து
கங்கைகள் - என்று கசிந்தீர்கள்
இப்போது
வங்கக் கடலிலே எமக்கு
கல்லறைகள் செய்கிறீர்கள்...
வேலிகளே எங்களை
காலி செய்கின்ற போது
நாங்கள் யாரை நம்புவது?
அதனாற் தான்
வேலி பாய்ந்தோம்...
நாங்கள் குழந்தைகளைப்
பிரசவித்துக் கொள்ளாமல்
ஆயுதங்களைப் பெற்றெடுத்து
தோளிலும் மார்பிலும் சுமக்கிறோம்..
ஒப்பந்த ஓலைகளால்
கண்ணீர் துடைக்கப்படும்...
என்றபோது கூட
நாங்கள் நம்பவில்லைத் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனாலே குழந்தைகளைத்
தத்துக் கொடுத்தோம்...
ஆனால் - விற்றுவிடவில்லை...
எங்கள் குழந்தைகளே
எங்களது தேசத்தை
மீட்டுக் கொள்வார்கள் என்று
நாங்கள் நம்புவதனாற் தான்
இன்று நிமிர்ந்து நடக்கிறோம்
எங்கள் குழந்தைகள்
எம்முடனிருக்கும் வரை
உங்களிடம் அகப்பட்டு
ஆலைக் கரும்பாகமாட்டோம்...
அதற்காகத் தானே - 'குப்பிகளை'
தாலியாக்கிக் கொண்டோம்...!
நீங்கள் எங்களின்
கற்பைப் பறிப்பதற்குள்
நாங்கள் எமது தாலிகளை
அறுத்துக் கொள்வோம்!
இருந்தாலும்
எங்கள் தேசம் கிட்டும் வரை
எம் சந்ததி ஓயமாட்டாது...!

- கலைவிளக்கு, நவம்/டிசம்-87.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை அறிவாயா

வானத்தைப் பிழிந்தெடுத்த
உன் நீல நயனங்களில்
என் கனவுகள்
வலம் வரவில்லையா?
இங்கே அவை மட்டுமே
எனக்குப் பூரண சொந்தம்...
இலவு மரத்துப் பறவையாக
என்னை மாற்றிவிட்ட பெருமை
உன்னையன்றி யாரைச் சேரும்...?
ஏனென்றால்,
உங்கள் அருகினிலேயே
என்றும் கூட வருவேன்' - என்றது
நீதானே அன்பே...!
வசந்த கீதத்தை
நுகர்ந்து வாழமுடியாத
நிலைமை எனக்கு...
கனவுகளையும் கற்பனைகளையும்
சுமந்ததால் - என்னிதயம்
வலுவிழந்து போனது...
உன் பெயரை எழுதாமலே
என் பேனா கூட
விதவையாகிப் போனது.

- தென்றல், ஏப்ரல்-87.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவமானம்

இரண்டுபட்டு ஊர் இருந்தால்
கொண்டாட்டம் கூத்தாடிக்குத்தானே
திரண்டு கொண்டு வந்த நீங்கள் - திருப்பிக்
கொண்டு சென்றது பிணங்களைத்தானே,

அக்கரையிலிருந்து அநுமார் வந்து
அசோகவனச் சீதையை மீட்டது வேறு - டில்லி
அக்கறை கொண்டு அனுப்பிய அநுமார்கள்
அடைந்த வெற்றியின் அளவுதானேது?

ஊரையும் உலகையும் ஏமாற்றினால்
உங்களின் மூக்குடைந்தது மறைந்திடுமா?
பேரையும் புகழையும் பெறமுடியாது - போரில்
பெரியபாடம் படித்தது கூட மறந்திடுமா?

அஞ்சியோடிய சிங்கள வஞ்சகர்களுக்காய்
அலைகடலைத் தாண்டிவந்து - நீங்களும்
நெஞ்சு நிமிர்த்தமுடியாமல் புறமுதுகிட்டு
நிலைகுலைந்தோடியதை உலகே அறியும்...

ஒப்பந்தம் கைச்சாத்தாகி எப்போதோ
ஒருவருடம் கூட ஓடிவிட்டது - நீங்கள்
தப்பாகப் போட்டகணக்கென்று புரிந்தால்
தப்பிப் பிழைத்து ஊர் சேருங்கள்!

- செப்டம்பர். 88, தூண்டில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னையும் அழைத்துக்கொள்

என் காதலி!
என்னையும் அழைத்துக்கொள்!
கண்ணில் நீந்தும்
கனவுகளுடன் கரைசேரமுடியாது
தினமும் கஸ்டப்படுகிறேன்...
என்னை அங்கு
உன்னிடம் அழைத்துக்கொள்
இருவரும் சந்தோஷிப்போம்..

புரியாத உள்ளங்களை,
பணங் கொத்து
முடிச்சுப்போட்டுவைக்க
பெரியவர்களுக்குத் தான்
எவ்வளவு பிரியம்
இப்போது அவர்களுக்கு
எல்லாமே புரியும்..!
என் பிரியமானவளே...!
நான் மட்டும்
ஏன் இங்கு - தனிமையில்
தவிக்க வேண்டும்
என்னையும் அழைத்துக்கொள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணச் சந்தையிலே
நிற்கின்ற காளைகளின்
மனங்களை விட
கரங்களே விசாலமானவை - என
நான் கண்டு கொண்டேன்...
வேதனையுடன் வெட்கித்தேன்
இங்கு வாழ்வதற்கு
எனக்கு இஷ்டமில்லை...
இனியவளே!
என்னையும் அழைத்துக்கொள்!

எத்தனை விஞ்ஞானப்
புயல்கள் வீசினாலும்
இந்தச் சீதனம் மட்டும்
சரிந்துவிடாது போலிருக்கிறது...
ஏழையாக இருந்தாலும்
கோழையாக இருக்கக்கூடாதென
முடிந்தளவு போராடி
துவண்டு போனேன்...
இலட்சங்களையே
இலட்சியமாகக் கொண்ட
இளைஞர் சமூகத்தில் வாழ
நான் கூச்சப்படுகிறேன்...
என் பாதி உயிரே
என்னையும் அழைத்துக்கொள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீரில்லா மீன்கள்

கடலும் கரையும் காதல் கொள்ளும்
கதிரவனைக்கண்டு கரைகள் கூசும் - கடல்
பதிலாய் எழுதிய கடிதங்களை
பத்திரமாய் நண்டு கரையிடம் சேர்க்கும்.

ஊரும் உலகும் இரவில்உறங்கும்
உரமேறிய உடல்களின் பயணம்
மரக்கலத்தின் துணையுடன் தொடங்கும்
மரணத்தைக் கொன்றே நாளும் தொடரும்

இரவும் அலையும் போட்டிபோடும்
இரைகளைத்தேடி மீன்கள் ஓடும்
கரையில் கண்ட கண்ணீரின் பதிப்புகள்
கன்றிப்போன காயங்களாய் நோகும்.

கரங்களும் வலையும் வலுவுடன் போரிடும்
கடுங்குளிர் படைகொண்டு வந்து
நெடுநாள் கோபமாய் உடலைத் தாக்கும்
நெஞ்சுறுதி மட்டுமே துணிந்து நிற்கும்.

இருளின் போர்வையை சூரியன் விலக்கும்
இரவு வேட்டையின் பலன்கள் யாவும்
கலங்களை முழுதாய் நிறைத்திருக்கும்
கரையில் அவையாவும் வெள்ளிப்பணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலிற்பட்ட துன்பங்கள் கரையும்
கஷ்டங்கள் துயரங்கள் எல்லாம் மறையும்
இஷ்டமாய் சுற்றம் சூடி மகிழ்ந்தே
இனிதாய் வாழ்கைப் படகு நகரும்.

தூரத்தே வெடிகுண்டு சப்தம் கேட்கும்
துருப்புகள் 'டிறக்குகளில்' வேகமாய் பறக்கும்
குடியிருப்பு மனைகளில் தாக்குதல் நடக்கும் - அங்கே
கூக்குரல், மரணவோலம் கேட்கும்.

தடைமுகாம்கள், வீதிகளில் தோன்றும்
தருணம் பார்த்தே அழிவுகள் நடக்கும்
படகுகள் தோணிவலைகள் எல்லாம்
படைகளின் நாசவேலைகளுக்கு இலக்காகும்

அன்றாடக் கருமங்கள் அஸ்தமனமாகும்,
அத்தியாவசியப் பொருட்கள் யானைவிலையேறும்
சுற்றிவளைத்தே தேடுதல்கள் நடக்கும் - மதில்
சுவர்களில் எல்லாம் பிரசுரங்கள் பேசும்.

பழையநாட்கள் படமாக ஓடும்
பழஞ்சோறுமில்லாது உயிர்கள் வாடும்
நாளும் பொழுதும் இவ்வாறு நிகழும்
நாட்டுக்கு நாடு பேச்சுவார்த்தை நடக்கும்.

- ஏப்ரல்/மே. 88, கலைவிளக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானாக நானில்லை

பாட்டினிலே இணையாத
இராகம் நான்
பாரினிலே துணையில்லாத
பாவியும் நான்
ஏட்டினிலே எழுதாத
எழுத்தும் நான்
எழுத்தறிவு இல்லாத
மூடன் நான்
தேனுக்குள்ளே விழுந்த
எறும்பும் நான்
தீயினிலே உருகுகின்ற
மெழுகும் நான்
வான்மழை காணாத
பயிரும் நான்
வசந்தமே தீண்டிடாத
பூமியும் நான்.

- தென்றல், ஓகஸ்ற், 87.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலாட்டு மாறிப்போனது

கண்ணுறங்கு கண்ணே கண்ணுறங்கு - நமக்கு
காலம் கனியுமென்று கண்ணுறங்கு
எண்ணில்லா ஏக்கங்கள் எனக்குண்டு - நாளை
எப்படியும் பூர்த்திசெய்வேன் உனைக்கொண்டு.

பொன்னேது பொருளேது பெட்டகமேது - உனக்கு
போட்டு அலங்கரிக்க உடைகள்தானேது - இந்து
மண்மீது நீ தவழ்ந்து வரும்போது - என்
மகிழ்ச்சியின் அளவுக்கு எல்லைதானேது.

மண்ணுலகில் நீ உதித்து வந்தபோது - திரு
மாங்கல்யம் இழந்தாள் ஏழையிம்மாது
பெண்ணெனவே வந்தாயே இப்புவிமீது
பேசாமல் கண்ணுறங்கு என்மடிமீது.

மானந்தான் நம்முடைய சொத்தானது
மதிதானே அதற்கிட்ட வித்தானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம்தான் நமக்கென்றும் பகையானது
காலனையும் விரட்டிவிடு நீ எதிர்த்து

சோதனைகள் வடிவினிலே வரும் சூது
சோர்ந்திடாதே! எதிர்த்து நின்று மோது
வேதனைகள் உனக்கென்றும் வராது
வேட்டுவைப்பாய் நீ வீரத்தமிழ் மாது

வஞ்சகர்கள் ஆளுகின்ற தேசமிது - பணிந்து
வரம் கேட்க நமக்கின்று நேரமேது
கெஞ்சிநின்றால் உரிமையது கிடைக்காது
மிஞ்சிவிட்டால் கெஞ்சிவரும் உலகமிது.

தந்தையர் விட்டுச் சென்ற கடமையிது - நீ
தயங்காது தடைகளைத் தகர்த்துவிடு.
எந்தவழி ஏற்றதுவோ தேர்ந்து எடு
இந்தமண்ணில் சுதந்திரமாய் வாழ்ந்துவிடு.

துடிக்கின்ற நெஞ்சத்தின் உறுதியிது - சிறு
துளிகூடக் குன்றாத வைரமிது - நீ
படிக்கின்ற பாடமெல்லாம் மானமது
பிறழாது காத்திடடி நாளை உனது.

- டிசம்பர். 88,. ஏலையா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ண அலைகள்

நீதானே
என் நெஞ்சின் வசம்
தீயைக் கொட்டிவிட்டாய்
இல்லையா? - வசந்தி!
இப்போது அது
கொழுந்து விட்டெரிகிறது...
பங்குனி மாதப் பனி
அதைத் தணிக்குமா என்ன?
பனிமழை விழும் சிலிர்ப்பில்
தனிமையில் உன் சிரிப்பை
நுகர்கின்றேன் - நிதமும்...
உனது ஓலைக்காக
கால் வலிக்கக் காத்துநின்ற
காலைகள் தான் எத்தனை?
அங்கு எனது இராத்திரிகள்
மிகவும் நீளமானவை...
இங்கே பகலுமல்லவா
நீண்டு கிடக்கிறது... உனது
நீலவிழிகள் சொன்ன கதைகள்
பொய்யாகிப் போயினவோ?
என் நெஞ்சில் எழும்
எண்ண அலைகள் கோடி
நாளும் அதில் தத்தளித்து
மூச்சுத் திணறுகிறேன்.

- ஏப்ரல். 88, தென்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தாயின் கடிதம்

அன்பு மகனே! இத்தனை காலமும் - நீ
அரபு நாட்டில் உழைத்தது போதும் - நாமினி
நன்றாய் வாழ்வதற்கு வழிசமைக்க
நாட்டிற்குப் புறப்பட்டு வந்துவிடு!

எவ்வளவுதான் நீ உழைத்து அனுப்பினும்
எள்ளளவும் நிம்மதியின்றி இங்கு
அல்லற்படும் எம்மவரை மீட்டெடுக்க
அவசரமாய் புறப்பட்டு வந்துவிடு!

இன்று நம்மண்ணில் குருதி பாய்கிறது
இனியும் இதை நாம் பொறுக்கலாமோ மகனே!
நன்றாய் நீ உழைத்தது போதும் - உடனே
நாட்டிற்குப் புறப்பட்டு வந்துவிடு!

களத்திலே நிற்கிறான் உன்தம்பி - விடியலின்
கனவுகளைச் சுமக்கிறாள் தங்கை
தாயகமொன்றை அமைத்திட நீயும்
தயங்காமல் புறப்பட்டு வந்துவிடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்தாயகம் ஒன்றே எமக்குத் தேவை
தரங்கெட்ட சிங்களனுடன் சேர்ந்தே - நாம்
இனியும் இழிவுடன் வாழ்வதா? - நம்
தாய் மண்ணை மீட்டிட தாவியே வந்துவிடு!

கோழையல்ல என்மகன் என்பதுவும் - நாம்
ஏழைகள்தான் என்பதுவும் எனக்குத் தெரியாதா?
அடிமைகள் நாமில்லை என்று - அறுத்து
அறிவிக்க அவசரமாய் நீயும் வந்துவிடு!

- கலைவிளக்கு, ஜூன்/ ஜூலை, 87.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிர்ந்த தளிர்

காலைத் தென்றல்
தவழ்ந்து வரும் - அது உன்
கால் கொலுசொலி தன்னைச்
சுமந்தே வரும் - நம்
கோயில் வீதி மரங்களெல்லாம்
கோலமயிலாய் நடனமிடும்...
கோதையுந்தன்
பாதம் நீண்ட
பாதை முழுவதும்
பூச்சொரியும் - அவை
பாவம் நீங்கி
மோட்சம் பெறும்..
நாள் முழுவதும்
தவமிருக்கும் - எனக்கு
உன் கடைக்கண் பார்வை
வரம் கிடைக்கும்
அதில் எனக்குப்
புதுச் சுகமிருக்கும் - என்று
வரைவதற்கு நான் விரும்பவில்லை...
உனது தைரியத்தை
வரைய முனைகிறேன்,
என்னால் முடியவில்லை...
விடுதலை வேள்வித் தீயில்
வெந்த தியாகிகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டியதுடன்
அவர்களுக்குத் தோள் கொடுக்க
நீ துடித்ததை
எப்படி எழுதுவேன்
உன் வீரத்தை
எப்படிப் பாராட்டுவேன்?..
ஆனால் - நீ
இப்படிச் செய்வாய் - என
நான் கனவிலும் எண்ணியதில்லை...
போயும் போயும்
அந்தத் தலைப்பாகைக் காரன்
உன்னைத் தீண்டியபோது
அந்த வீரம்
எங்கேயடி போனது?
அவனது கழுத்தை
வாள்கொண்டு சீவாமல்
கோழைபோல் நீயும்
உன் கழுத்திலே...
கயிற்றை மாட்டிக்கொண்டாயே...
என் காலை இழந்தது பற்றிக்
கவலைப் படவில்லை...
உன்னை இந்தச் சமூகம்
பறிகொடுத்து விட்டதையே
நினைத்துக் கலங்குகிறேன்.

- தென்றல், பிப்ரவரி, 88.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டுகோளொன்று

ஈழத்தாய் ஈன்றெடுத்த என் இனிய சகோதரரே
இன்றெம் மக்களின் இன்னல்தனை அறிவீரே - நன்றாய்
வாழத்தான் நமக்கொரு நாடுவேண்டு மென்றால்
வாஞ்சையுடன் எமக்குத் தோள்கொடுக்க வாருங்கள்!

உடலின் ரணங்களை மறந்து விட்டுப்பல
உயிர்களின் மரணங்களையும் உதறிவிட்டு - எம்
விடியலை நோக்கிய பயணம் தன்னில்
விருப்புடனே விரைந்து சேர்ந்திடுங்கள்!

எத்தர் கூட்டங்களின் ஏமாற்று வேலைகளையும்
எதிரிகளின் வெறியாட்டங்களையும் பார்த்துக்கொண்டு
புத்தரைப்போல் உட்கார்ந்து இருந்திடாமல்
புற்றீசலாய்ப் புறப்பட்டே இங்கு வந்திடுங்கள்!

மேலைநாடுகளில் மேம்பட்டு வாழுங்கள்
மெல்லிதயம் தாயகத்துக்காய் இரங்கிடாதா?
வேலையெதுவுமின்றி வீடு, உணவுமின்றி - தினமும்
வேகுகின்ற மக்களுக்கேனும் உணவிடுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாட்டமும், கும்மாளமுமாய் வாழுமுங்கள்
கொள்கை தானென்ன? - உணவிற்கும் உயிருக்கும்
திண்டாடுகின்ற எங்களின் நிலையை எண்ணி
திரட்சியாய் உதவிதனை நல்கிடுங்கள்!

குடிமனை எதுவுமின்றி குழந்தைகளையே இழந்து
குற்றுயிராய் வாழும் தாய்மார்கள் எத்தனை - அங்கு
'குடியும்' குடித்தனமுமாய் கொட்டமடிக்கின்ற - சில
குள்ளநரிகளுக்கு எம்நிலையைச் சொல்லுங்கள்!

நிரந்தரமாய் அங்கே வாழலாம் - என்று பலர்
நித்திரையிலேயும் பிதற்றுவதையும் நாமறிவோம்.
சுதந்திரமாய் நாம் வாழ்வதற்கொரு நாடுதன்னை
சுகமாகப் பிரசவிக்க நீங்கள் மருத்துவராய் வந்திடுங்கள்

வட்டியும் வாடகையுமாய் வாழ்கின்றவர்களே!
வருங்காலம் உங்களுக்கு அங்கல்ல - இங்குதான்
பெட்டியும் கையுமா வந்திறங்கி வாழவேணும்.
பெரியமனசு வைத்து பொருளுதவி நல்கிடுங்கள்!

- கலைவிளக்கு- மார்ச்/ஏப்ரல், 88.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிப்பூக்கள்

என் இனியவளே!
உன் சுவாசக்காற்றை
தினமும் சுவாசித்துக் கொண்டிருக்கலாம்.
என்றுதான் இறுதிவரை இருந்தேன்...
நீ அந்நிய நாட்டிற்குப்
பறந்ததால் - அது
அறுந்து போய்விட்டதே....!
'உங்களைப் பிரியமாட்டேன்'
என்று எப்போதோ சொன்னாயே...
ஆனால் - இன்று...?
உன்னைப் பிரிந்ததில்
எனக்கு வருத்தமில்லை.
பிரித்தவர்களின் மேற்தான்
உன் ஸ்பரிசத்தைவிட
இம் மண்ணின் ஸ்பரிசத்தையே
அதிகம் நேசிக்கிறேன்.
நாம் இம் மண்ணைவிட்டுப்
பிரியமுடியாதவர் - என்று
உனக்குத் தெரியுமல்லவா?
இருந்தும்
நம்பிரேமம் மாறாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ திரும்பி வந்து
இம் மண்ணில் - உன்
பாதச் சுவடுகளைப்
பதிக்கின்ற வேளை - இங்கே
வெற்றிப் பூக்கள்
கம்பீரமாகப் புஷ்பித்திருக்கும்
நீ சுதந்திரக் காற்றை
மகிழ்ச்சியுடன் சுவாசிப்பாய்..
இருந்தும் - என்னைச்
சந்திப்பாயா? என்பதுதான்
கேள்விக்குறி...
உன் கண்களில்
நான் தட்டுப்படாவிட்டால்
என் கல்லறையைத்
தேடிப் பார்...
அங்கே புஷ்பித்திருக்கும்
வெற்றிப் பூக்களில் ஒன்று
உனக்காகவே வாடாமல் இருக்கும்.

- தென்றல், நவம்பர்- 87.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிநட்சத்திரங்கள்...

மாரிகோடை என்று
காலம் மாறுகிறது - இந்த
மனிதன் மட்டும்
ஏன் மாற மறுக்கிறான்...?
பணத்தை எண்ணுவதில்
குறியாக இருக்குமிவன் - ஏனோ
தாயகத்தை எண்ணிப் பார்க்க
தவறிப்போய் விடுகிறான்...?

குழந்தைக்குப் பிறந்தநாள்
குடி கூத்து கும்மாளம்...
கொண்டாட்டங்களுக்கு அளவில்லை.
இன்று ஐரோப்பியத் தமிழரின்
அன்றாடக் கடமைகளில் ஒன்று...
இன்னும் சொன்னால்
'வீரகேசரியில் விளம்பரம்'
வீடியோப் படப்பிடிப்பு
வீட்டுக்கு வீடு
தமிழ்க் 'கொம்பியூட்டரின்'
தரமுயர்ந்த 'கார்ட்'
அங்கே,
வீட்டுக்கு வீடு மரணவோலம்
வீதிகளிற் பிணக்குவியல்
நாதியற்றுக் குழந்தைகள்
நாய்களைவிடக் கேவலமாய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ தமிழா!
எண்ணிப்பார் எம்மினத்தை...

கல்யாண வீடென்றால்
கலகலப்பே தனி
எல்லாமே நம் நாட்டோடு சரி...
இல்லை...இல்லை...
இங்கும் பன்மடங்கு
கொள்ளையாச் செலவழித்து
கொண்டாட்டம் நடாத்துகிறார்...
சீதனம் கூட 'சிலோனிலிருந்து'
'சிக்ஸர்' அடித்து
சீமைக்கும் வந்துவிட்டது...

சீ தமிழா!
உன்னைத் திருத்த முடியாதா?
உன்னோடு சமமாய்
அகதிப் பணம் பெறுபவளிடமா?...
சிந்தித்துப் பார்...
நீ பிறந்த மண்ணையும்
நிமிர்ந்து வந்த பாதையையும்...

அங்கே,
உடுத்த துணியின்றி
குடியிருக்க வீடின்றி
அகதிகளாய் நம் இரத்தங்கள்...
இங்கே,
அகதி - என்ற பெயரை
நீயே உனக்குச் சூட்டிக்கொண்டு
உடுத்தியிருப்பது 'பனாரஸா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஞ்சிபுரமா? என்று
அறைகளிலிருந்து கதையளக்கிறாய்...

சிறைகளிற் சித்திரவதையுடன்
அங்கே நம் சகோதரர்கள்
சின்னபின்னமாக்கப் படுவதை
சற்றுச் சிந்தித்துப் பார்...
'கவுண்' அணிந்தாலே
கற்புக்குப் பங்கம் என்று
கலங்கிப் புடவை கட்டிப்
பூவும் பொட்டுமாய்ச் சிறுமிகள்
அங்கே அஞ்சியிருக்க
இங்கே 'பவுன்' என்ன விலை?
சவுதியா? சிங்கப்பூரா? என்று
சந்தை நடத்தி
'சல்லி' சேர்க்கிறாய்
சற்றுச் சிந்தித்துப் பார்...

வெற்று வயிற்றோடு
வேகுகின்ற நம்மிரத்த உறவுகள்
சத்தமிடுவது - இந்த
வற்றாத கடலையும் தாண்டி,
வசதியுடன் வாழ்கின்ற
உன் காதுகளுக்குக் கேட்கவில்லையா?
உற்றுக் கேட்டுப்பார்
உனக்கும் கேட்கும்...

பிள்ளைக்குச் சடங்கு செய்ததில்
அவ்வளவு வருமானமில்லை - என்று
பிதற்றுகின்ற பெற்றோரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் வேறுவிதமாக
வேதனம் பெறலாமே..
கொள்ளை கொள்ளையாக
பணம் கொட்டுமே...
இப்படிப் பேசுவதற்கு
உங்களுக்கு வெட்கமில்லை...?
பணமென்றால் நீ
நாயாக அலைகிறாயே...

அங்கே,
தெருவினிலே
பிணங்களை நாய்கள்
தின்னுகின்றதடா!
நம்முறவுகள் தினமும்
உயிருக்குப் போராடுவதை
உணர மறந்தாயே தமிழா!
உனக்கு ஆடம்பரம் தேவையா?
இன்று சுகபோகம் அனுபவிப்பாய்
நாளை...?
எப்படியும் தமிழருக்கு
ஒரு விடிவு வரும்.
அப்போது....
வேடதாரிகளுக்கும்
ஒரு முடிவு வரும்.

- தூண்டில். பிப்ரவரி-89.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் பிரிண்டர்ஸ் 044-8224803

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org